janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஆகஸ்ட் 28 - செப்டம்பர் 03 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 21






அறப்போருக்கு **ஆயத்தமாவீர்!**

சென்ற வார கடிதத்தில் நமது மாநில மாநாடு நடைபெற்றது குறித்து குறிப்பிட்டிருந்தோம். அவற்றில் விடுபட்டதை தற்போது >>>

ப 02



வெற்றியின் ரகசியம்... **பவானிசாகர்**

நமது கட்சியின் மாநில 25வது மாநாடு வரலாற்று சிறப்புமிக்க, முத்திரை பதித்திட்ட மாநாடு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு >>>

ப 03



நெல்லை கண்ணன் **பேரிழப்பு...**

தாமிரபரணி பொங்கிப் பிரவாகம் எடுத்து ஓடும் திருநெல்வேலி நகரின் மத்தியில் அமைந்துள்ள நெல்லையப்பர் காந்திமதியம்மன் கோவில் >>>

ப 10





## நெல்லையில் டிசம்பர் 1, 2, 3-ல்

# ஏஐடியுசி மாநில மாநாடு

**ஏஐடியுசி மாநில பொதுக்குழு கூட்டம் தருமபுரி அதியமான் அரண்மனையில் ஆகஸ்ட் 23, 24 தேதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமையில் நடைபெற்றது.**

கூட்டத்தில் மாநிலப் பொதுச்செயலாளர் டி. எம்.மூர்த்தி வேலை அறிக்கை வைத்தார். தேசிய செயலாளர் வகிதா நிஜாம், மாநிலத் துணைத் தலைவர்கள் ஏ.எஸ்.கண்ணன் முன்னாள் எம்எல்ஏ, வேலூர் எஸ்.ஆர்.தேவதாஸ், திருப்பூர் என்.சேகர், கோவை என்.செல்வராஜ், கல்பாக்கம் எம்.சங்கையா, துணைப் பொதுச் செயலாளர் கே.இரவி, செயலாளர்கள் எஸ்.காசி விஸ்வநாதன், நா.பெரியசாமி (முன்னாள் எம்எல்ஏ), எஸ்.சந்திரகுமார், எம் ராதாகிருஷ்ணன், எஸ்.சின்னச்சாமி, எம். ஆறுமுகம் (முன்னாள் எம்எல்ஏ), பொருளாளர் பீட்டர் துரைராஜ் உள்ளிட்ட 116 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. தமிழ்நாடு அரசின் கவனத்தை ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்:

கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கைகளை ஒன்றிய அரசு கையாள்கிறது. இதற்காக விவசாயிகள் தொழிலாளர்கள் பொதுமக்கள் நலன் மீது தாக்குதலை தொடுத்து வருகிறது. இதனால் ஒன்றிய அரசை நடத்திவரும் பாஜகவையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் நாடாளுமன்ற, சட்டப்பேரவை தேர்தல்களில் தமிழ்நாட்டு மக்கள் தோற்கடித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கைகளுக்கு மாறாக தமிழ்நாடு அரசு தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் செயல்பட வேண்டும். தமிழ்நாடு அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து, 2022 செப்டம்பர் 13ஆம் தேதி அன்று மாவட்ட தலைநகரங்களிலும் தொழில் மையங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என இக்கூட்டம் முடிவு செய்தது

## மாநில பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்

**கோரிக்கைகள்:**

1. தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ரூபாய் 21,000 என சட்டப்படி அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு அரசின் உள்ளாட்சி, மருத்துவத்துறை, ஆஷா, கூட்டுறவு, டாஸ்மாக் பொதுத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பணிபுரியும் நிரந்தரமற்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் மாதம் ரூபாய் 21,000 ஊதியமாக வழங்க வேண்டும்

2. தமிழ்நாடு அரசு மற்றும் தனியார் துறைகளில், தொழிற்சாலைகள் நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் நிரந்தர தன்மை கொண்ட பணியிடங்களில் கேஷுவல், காண்ட்ராக்ட், அவுட் சோர்ஸிங் உள்ளிட்ட பெயர்களில் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தொழிலாளர்கள் ஊதியத்தையும் சமூக பாதுகாப்பையும் இடைத்தரகர்கள் சுரண்டிக் கொழுக்கவுமே இந்த ஒப்பந்த முறை வழி வகுக்கிறது. எனவே ஒப்பந்த முறைமையை ஒழிக்க வேண்டும். 240 நாள் பணிபுரிந்த தொழிலாளர்கள் அனைவரையும் உடனடியாக நிரந்தரம் செய்ய வேண்டும்

3. மின் கட்டணம், வீட்டு வரி, சொத்து வரி, குடிநீர் வரி ஆகியவற்றை செங்குத்தாக உயர்த்தி உள்ளதைக் கைவிட வேண்டும்.

4. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், நுகர் பொருள் வாணிப கழகம், மின்வாரியம், ஆவின் உள்ளிட்ட அரசு பொது நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் முயற்சிகளை கைவிட வேண்டும்.

5. ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தொழிலாளர்களுக்கு எதிரான நான்கு சட்ட தொகுப்புகளை எதிர்த்து, ரத்து வேண்டும் எனக்கோரி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மாநில விதிகளை நிறைவேற்ற மறுக்க வேண்டும்.

6. கட்டுமான, உடல் உழைப்பு நல வாரியங்களில் பதிவு செய் துள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் மற்றும் டாஸ்மாக் பணியாளர்களுக்கும் இஎஸ்ஐ மருத்துவ வசதி வழங்க வேண்டும். நலவாரியத்தில் இருந்து மாதம் ரூ.6,000 ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

2. இந்திய கம்யூனிஸ்ட் மறியலுக்கு ஆதரவு: மின்சார திருத்தச் சட்டத்தை எதிர்த்தும், மின் கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு உள்ளிட்டவற்றை ரத்து செய்ய கோரியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழு வருகிற ஆகஸ்ட் 30 ஆம் தேதி தமிழ்நாடு முழுமையிலும் நடத்தும் மறியல் போராட்டத்தை ஏஐடியுசி ஆதரிக்கிறது. அதில் பங்கேற்பது என முடிவு செய்கிறது.

3. மாநில மாநாடு: ஏஐடியுசி யின் தமிழ்நாடு மாநில மாநாட்டை 2022 டிசம்பர் 1,2, 3 தேதிகளில் திருநெல்வேலியில் நடத்துவது என பொதுக்குழு கூட்டம் முடிவு செய்கிறது.

இவ்வாறு மாநில பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு விசாரணை ஆணைய அறிக்கையை

# மக்கள் மன்றத்தில் வைத்திடுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

தூத்துக்குடி அருகில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் ஆலையின் இயக்கத்தின் நச்சுக் கழிவுகள் வெளியேறி சுற்றுச்சூழல் பாதித்து, உயிர் வாழ்வும் பறிபோகும் அபாயம் எட்டிய நிலையில், அந்த ஆலையை நிரந்தரமாக மூடிவிட வேண்டும் என்று அரசியல் கட்சிகள், மற்றும் பல்வேறு அமைப்புகளும், அப்பகுதி பொதுமக்களும் நீண்ட காலம் போராடி வந்தனர். இது தொடர்பாக மாவட்ட நீதிமன்றம் தொடங்கி, உச்சநீதிமன்றம்வரை வழக்குகளும் நடைபெற்றன. இன்னும் சில வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஸ்டெர்லைட் ஆலை மூடல் தொடர்பான கோரிக்கையை வலியுறுத்தி வந்த அமைப்புகள் ஒருங்கிணைந்து 2018 ஆண்டில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டன. இந்தப் போராட்டம் தொடங்கிய நூறாவது நாளில், 2018 மே 22 ஆம் தேதி பெரும் மக்கள் திரண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி பேரணி சென்றனர். அப்போது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

இந்தச் சம்பவம் நாட்டை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது. தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அப்போதைய அஇஅதிமுக அரசு ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைத்தது.



நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் மூன்றாண்டுகளாக விசாரணை நடத்தி கடந்த 2021 மே 14 ஆம் தேதி இடைக்கால அறிக்கையை அரசுக்கு சமர்பித்தது. தற்போது இறுதி அறிக்கையை அரசுக்கு வழங்கி விட்டதாகவும், அதில் உள்ள பரிந்துரைகள் சிலவும் செய்திகளாக வெளியாகியுள்ளன.

குறிப்பாக, சம்பவ நேரத்தில் காவல்துறை தென் மண்டல ஐஜியாக பணியாற்றியவர் உட்பட 17 காவல்துறையினர் தான் துப்பாக்கி சூட்டிற்கு காரணம் என தெரிவித்திருப்பதும், மாவட்ட ஆட்சியரின் அலட்சியம் மற்றும் பொறுப்பற்ற செயலும் தான் துப்பாக்கி சூட்டிற்கு முக்கிய காரணங்கள் என ஆணையம் மதிப்பிட்டிருக்கிறது.

தொடர்ச்சி 09ம் பக்கம் >>






# அறப்போருக்கு ஆயத்தமாவீர்!

**பேரன்பிற்குரிய தோழர்களே!**

**சென்ற வார கடிதத்தில் நமது மாநில மாநாடு நடைபெற்றது குறித்து குறிப்பிட்டிருந்தோம். அவற்றில் விடுபட்டதை தற்போது குறிப்பிட்டுள்ளோம்.**

குறிப்பாக தனிக் கிளை இரண்டின் தோழர்கள் இரவு, பகல் பாராது தீர்மானங்கள் உள்ளிட்டவைகளை உடனுக்குடன் அச்சிட்டு தந்தார்கள். அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது; தோழர்களுக்கு நமது பாராட்டுக்கள்.

அடுத்து நமது மாநாட்டில் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் சி.ஹெச். வெங்கடாசலம் அவர்களும், தேசியக் குழு உறுப்பினர் தோழர் ஸ்ரீகுமார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அவர்கள் இருவரும் மாநாட்டில் உரையாற்றிட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அத்தகைய வாய்ப்பை வழங்கியிருந்தால் வங்கி, பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புத் துறைகள் மோடியின் ஆட்சியில் எவ்வாறு எல்லாம் சீரழித்து சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது என்பது குறித்து மாநாட்டில் எடுத்துக் கூறி இருப்பார்கள். இவைகள் விடுபட்டு விட்டன. இதனையும் சென்ற கடிதத்துடன் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நமது மாநாடு பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. தீர்மானங்கள் நூல் வடிவில் வெகுவிரைவாக வெளியிடப்படும். இதனை பொதுமக்கள் மத்தியில் கொண்டு போய் சேர்க்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நம்முன் உள்ளது என்பது மட்டுமல்ல, தீர்மானங்களை அமல்படுத்திட நாம் தொடர் இயக்கங்களை மேற்கொள்ளவேண்டும்.


மாநாடு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய இரண்டு கடமைகளைத் தீர்மானித்தது. அதனில் ஒன்றை சிறப்பாக நிறைவேற்றி உள்ளோம்.

குறிப்பாக 75ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவை சிறப்பாக கொண்டாட முடிவு செய்து, ஆகஸ்ட் 9ஆம் நாள் முதல் 15ஆம் தேதி வரை மூவர்ணக் கொடியை தமிழ்நாடு எங்கும் பட்டொளி வீசி பறக்கச் செய்திட வேண்டும் என்று முடிவு செய்தோம்.

அதன் தொடக்கமாக மாநாட்டு அரங்கில் ஆகஸ்ட் 9–ல் தேசியக் கொடியை ஏற்றினோம்.

ஆகஸ்ட் 15–ல் நமது கட்சியின் தலைமையகமான பாலன் இல்லத்தில் நமது கட்சியின் மூத்த தலைவர், தகைசால் தமிழர் விருது பெற்று நமது கட்சிக்கு பெருமை சேர்த்த தோழர் இரா.நல்லகண்ணு அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

இதனைப் போன்று அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட, ஒன்றிய கட்சி அலுவலகங்கள், கிளை அலுவல கங்களில் நமது கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், வர்க்க, வெகுஜன அமைப்பு களின் தலைவர்கள் தேசியக் கொடியேற்றி சிறப்பித் துள்ளனர்.



அறப்போர் : மக்களின் அத்தியாவசிய பண்டமான உணவுப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் மக்களுக்கு தேவையான பொருட்கள் மருந்து, மாத்திரைகள் என அனைத்தும் பன்மடங்கு விலைகள் உயர்ந்துள்ளன என்பது மட்டுமல்ல, மேலும் தங்குதடையின்றி விலை உயர்ந்து கொண்டே இருக்கின்றன.

உயர்ந்து வரும் விலைகளைக் குறைத்திட அல்லது கட்டுப்படுத்திட ஒன்றிய அரசு எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை என்பதல்ல, நடவடிக்கை எடுத்திட அரசுக்கு விருப்பம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

நாடாளுமன்றத்தில் விலைவாசி உயர்வு குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்காக பல நாட்கள் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் போராட வேண்டிய மிக மோசமான நிலை ஏற்பட்டது என்பதனை நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

விலைவாசி உயர்வு குறித்து விவாதிக்க வேண்டுமென்பதற்காக போராடிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்ட அநீதிகளைத்தான் நாம் காண முடிந்தது.

தற்போதைய மோடியின் தலைமையிலான ஒன்றிய அரசு எதிர்க்கட்சிகள் இல்லாத, இடம் பெறாத நாடாளுமன்றத்தையே விரும்புகின்றது. சர்வாதிகாரத்தை நிலை நாட்டிட முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

விலைவாசி உயர்வு குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரினால், நிதி அமைச்சருக்கு உடல் நலமில்லை – அவர் வரும் வரையில் காத்திருக்க வேண்டும் என்று அரசு கூறி காலம் கடத்தி, பின் ஒருவழியாக அவைக்கு வந்திட்ட நிதி அமைச்சர் திருமதி நிர்மலா அவர்கள் விலைவாசி உயரவில்லை என்ற அப்பட்டமான பொய்யை நா கூசாமல் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததைக் கண்டு நாடே நகைக்கின்றது.

வருமானம் இருந்த நிலையிலேயே உள்ளது. அல்லது மேலும் குறைகின்றது. வேலையின்மை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. வறுமை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இவைகள் குறித்தெல்லாம் கிஞ்சிற்றும் கவலை கொள்ளாத இரக்கமற்ற அரசாக மோடியின் அரசாட்சி தொடர்கின்றது.

இந்நிலையில்தான் நமது மாநில மாநாடு, ஆம் முத்திரை பதித்திட்ட மாநில மாநாடு, விலைவாசி உயர்வுக்கு எதிராக ஆகஸ்ட் 30ஆம் நாள் காலை மாநிலம் முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக மாபெரும் மறியல் அறப் போராட்டத்தை மேற்கொள்ள அறைகூவல் விடுத்துள்ளது.

விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் மக்கள் அனைவரும் மிகக் கடுமையான பாதிப்பிற்கும், நெருக்கடிகளுக்கும் ஆளாகி அல்லல் பட்டு வருவதை ஆட்சியாளர்களின் செவிட்டுக் காதுகளில் உரைக்கச் செய்ய மாநிலம் முழுவதும் போர்க்குரல் எழுப்பிட மாநாடு அறைகூவல் விடுத்துள்ளது.

வேளாண் உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற்ற போதும், உணவு தானியங்கள் ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு வளர்ச்சி பெற்ற போதும், அரிசி, பருப்பு, கோதுமை, வெங்காயம் என அனைத்துப் பொருட்களின் விலைகளும் இறக்கை கட்டிப் பறக்கின்றன.

இரக்கமற்ற மோடி அரசு அரிசி, பால், தயிர் என்பது மட்டுமல்ல, சவப்பெட்டிக்கும் ஜிஎஸ்டி வரி போட்டு தனது கல் நெஞ்சை வெளிப்படுத்தியுள்ளது.

வீட்டை சுத்தம் செய்யும் வாருகோல் உட்பட எதனையும் மோடி அரசு விட்டுவைக்கவில்லை.

குழந்தைகள் பயன்படுத்தும் ரப்பர், பென்சில், நோட்புக் என அனைத்திற்கும் வரி, வரி.

ஏழை, எளிய மக்களால் வெண்கலம், பித்தளை, சில்வர் பாத்திரங்கள் வாங்க இயலாத நிலையில் அலுமினிய பாத்திரங்களை பயன்படுத்துகின்றனர். அவற்றிற்கும் வரி மேல் வரி விதித்து மக்களை வாட்டி வதைக்கின்றது.

உப்பிற்கு வரி விதித்த அந்நியர் ஆட்சியை எதிர்த்து அன்று உப்புச் சத்தியாகிரக போராட்டம் காந்தியடிகள் தலைமையில் தண்டியிலும், வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையிலும் நடைபெற்றது.

இன்று உப்பு மட்டுமல்ல, மக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்திற்கும் வரி மேல் வரி விதித்து வாரி சுருட்டுகின்றது மோடியின் ஒன்றிய ஆட்சி.

ஜி.எஸ்.டி. வரியில் மாநில அரசுகளுக்குரிய தொகையினையும் தானே அபகரித்துக் கொள்ளும் ஒன்றிய அரசு, அதனை மாநில அரசுக்கு வழங்காமல் தனதாக்கிக் கொள்கிறது.

மாநில அரசுகள் தங்களுக்குரிய நிதியினை கேட்டு ஒன்றிய அரசிடம் மன்றாட வேண்டிய நிலை உள்ளது.

ஒன்றிய அரசு பேரரசைப் போன்றும், மாநில அரசுகள் குறுநில மன்னர்களைப் போன்றும் ஜனநாயகமற்ற முறையில் நடத்துவதன் மூலம் சர்வாதிகாரம் தலைதூக்கி நிற்கின்றது.

தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு வழங்க வேண்டிய ஜி.எஸ்.டி. நிதி ரூ.2,439 கோடி உள்ளது.

மாநிலத்தின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் கடந்த ஆகஸ்ட் 17 இல் டெல்லி சென்று பிரதமரை சந்தித்த போது, எங்கள் மாநிலத்துக்கு உரிய நிதியை வழங்குங்கள் என மனு கொடுத்து மன்றாட வேண்டிய நிலையை என்னவென்று சொல்வது?

ஒன்றியத்தில் நடைபெறுவது ஜனநாயக ஆட்சியா? அல்லது மன்னராட்சியா? அடுத்து வரும் பெரும் ஆபத்து மின்சார திருத்த மசோதா! தனியாரிடமிருந்த மின்சாரம் பொதுத்துறையாக மாற்றப்பட்ட பின்னர்தான் கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைத்தது.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் – குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு கட்டணமில்லா மின்சாரம் – 100 யூனிட் வரை கட்டணமில்லை – கைத்தறி – விசைத்தறிகளுக்குச் சலுகை என்று தற்போது நடைமுறையில் உள்ளது.

தற்போது ஒன்றிய அரசு மேற்கொள்ள உள்ள மின்சார திருத்த மசோதாவில் – மின்சாரம் மீண்டும் தனியாரிடம் செல்லக் கூடிய பெரும் ஆபத்து ஏற்பட உள்ளது. தலைக்குமேல் கூரான கத்தி தொங்கிக் கொண்டுள்ள அபாயத்தை மக்களுக்கு உணரச் செய்திட வேண்டும்.

ஒன்றிய அரசின் நிர்ப்பந்தம் காரணமாக தமிழ்நாடு அரசு மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது.

தொடர்ச்சி 6ம் பக்கம் >>



- நா. பெரியசாமி

# வெற்றியின் ரகசியம் வெளிப்படுத்தும் பவானிசாகர்...

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு (வடக்கு) மாவட்டத்தில் கட்சியின் மாநில மாநாட்டு பேரணிக்கு மக்களை திரட்டி வந்து பங்கேற்ற முன்னணி தோழர்களையும் , மக்கள் தொண்டர் படையில் பங்கேற்று அணிவகுத்து தோழர்களையும் சிறப்பித்து, பாராட்டும் வகையில், 22.08.2022 காலை 10 மணிக்கு சத்தியமங்கலம் அலுவலகத்தில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.**

கட்சியின் மாநிலக் குழு உறுப்பினரும், பவானிசாகர் சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினருமான பி.எல்.சுந்தரம் தலைமை தாங்கினார்.

கட்சியின் தமிழ்நாடு மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்பி, மாநிலக் குழு உறுப்பினர் நா.பெரியசாமி முன்னாள் எம்எல்ஏ, மாநிலக் குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன், மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன்குமார், துணைச் செயலாளர் கே.சக்திவேல் உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகள், இடைக்குழு செயலாளர்கள் மற்றும் 40க்கும் மேற்பட்ட பெண்கள் உள்பட 200 முன்னணி தோழர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**கட்சியின் 25-வது மாநில மாநாட்டின் நிறைவாக 09.08.2022 ஆம் தேதி திருப்பூர் மாநகரில் நடைபெற்ற செஞ்சட்டை பேரணியில் திரண்ட பல்லாயிரம் உழைக்கும் மக்களில் பவானிசாகர் தொகுதியில் இருந்து மட்டும் 8 ஆயிரத்து 61 பேர் கலந்து கொண்டுள்ளார். ஆம், கட்சி உறுப்பினர்கள் 4 ஆயிரம் மட்டுமே, ஆனால், செஞ்சட்டை பேரணிக்கு திரட்டப்பட்ட மக்கள் எண்ணிக்கை எட்டாயிரத்துக்கும் அதிகம். இது எப்படி சாத்தியமானது? இந்த மகத்தான வெற்றியின் ரகசியம்தான் என்ன?**

மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன்குமார் பேசத் தொடங்கினார். “மாநில மாநாட்டு பேரணிக்காக மக்களை திரட்டிச் செல்லும் பணிகளை மேற்கொள்ள கட்சியின் இடைக்குழுக் கூட்டங்களை நடத்தத் தொடங்கினோம்.

முதல் கூட்டமாக தாளவாடி ஒன்றியத்தில்.... இடைக்குழுக் கூட்டத்தை 13.07.2022 ஆம் தேதி நடத்தினோம். இடைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் எம்.எல்.ஏ. பி.எல்.சுந்தரம், இடைக்குழுத் தோழர்களின் விவாதங்களை கவனித்து வந்த நிலையில், ஒரு முடிவுக்கு வந்தவராக கூட்டத்தில் குறுக்கிட்டு, தங்கள் பகுதியில் வாழும் மக்களில் 50, 60 பேர்களை திரட்டும் திறன் உள்ள தோழர்கள் யார், யார் என்ற வினாவை எழுப்பினார்.

உனடியாக சில தோழர்கள் கைகளை உயர்த்தி, தாங்கள் தயார் என முன்வந்தனர். சரி, 50 பேர் வரை திரட்டுபவர்கள் ஒரு வாகனத்தை வழிநடத்தும் பொறுப்பேற்க வேண்டும் என வேண்டுகோள் வைத்தார். முன்வந்த இடைக்குழுத் தோழர்கள் ஆர்வத்துடன் கை உயர்த்தி, பொறுப்பேற்று, முனைப்புடன் செயல்படத் தொடங்கினர்.

பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குள் ஏழு ஒன்றியக் குழுக்கள், இரண்டு நகரக் குழுக்கள் என 9 இடைக்குழுக்கள் செயல்படுகின்றன. பவானிசாகர் தொகுதியில் உள்ள அனைத்து இடைக்குழுக் கூட்டங்களையும் நடத்தி முடித்து, இவைகள் அனைத்திலும் பி.எல்.சுந்தரம் கலந்து கொண்டு வழிகாட்டி உதவினார். தொகுதி முழுவதும் 183 வாகனங்கள் என்பது உறுதியானது. இந்த வாகனங்களை வழி நடத்தும் ஊழியர்கள் தேர்வு செய்யப்பட்டு, உழைக்கும் மக்களை திரட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கட்சிக் கிளைக் கூட்டங்களில் முதலில் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பேரணியில் பங்கேற்க வேண்டும் என்பது உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து கட்சி உறுப்பினர் குடும்பத்தில் இருந்து மற்றொருவர் கலந்து கொள்வதை உறுதி செய்யும் பணி தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து வர்க்க வெகுமக்கள் அமைப்பு களின் உறுப்பினர்கள், இவர்களுடன் கட்சியின் சேவையால் பயனடைந்த பயனாளிகள் என பேரணிக்கு திரட்டப்பட வேண்டிய உழைக்கும் மக்கள் பகுதி இலக்கு நிர்ணயித்து, குறிவைத்து தொடர் தயாரிப்பில் ஈடுபட்டனர். ஒவ்வொரு நாளும் கிடைக்கும் கள அனுபவத்தை பரிசீலித்து, அடுத்த டுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நல்ல முன் னேற்றம் தொடர்ந்து ஏற்பட்டு வருவது தோழர்களை ஊக்க மூட்டியது.

பவானிசாகர் தொகுதி முழுவதும் 188 இடங்களில் விளம் பரப் பேணர்கள், நெடுஞ்சாலைகளில் மட்டும் 24 முக்கிய இடங்களில் சுவர் எழுத்துக்கள், சமூக ஊடக விளம்பரம்





என்பது திருப்பூர் பேரணிக்கு செல்ல வேண்டும் என்ற ஆர் வத்தை தீவிரமாக்கியது.

தொகுதி முழுவதும் உறுதி செய்யப்பட்ட 183 வாகனங் களில். 149 பேருந்துகள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் பேசி, அவர்கள் வழங்கும் வாகனங்களுக்கு உரிய வாடகையும் நிர்ணயித்து முழுமையாக அவர்களிடம் வழங்கப்பட்டதை கொஞ்சம் வியப்புடன் பார்த்தனர்

தாளவாடி ஒன்றியம், கடம்பூர் மலைப்பகுதி, கர்நாடக எல்லைப் பகுதி கிராமங்களிலிருந்து பழங்குடி மக்கள், ஆதிவாசிகள், மலைவாழ் மக்களை பேரணிக்கு திரட்டு வதற்காக சத்தியமங்கலம் பகுதியில் பேருந்துகள் ஏற்பாடு செய்யும் செலவுகளை கணக்கிட்டு பார்த்தால் பெரும் செலவு என்ற முடிவுக்கு வர நேர்ந்தது. ஆகையால் தாளவாடி, கடம்பூர், போன்ற மலைப்பகுதிகளில் திரட்டப்படும் மக்களுக்காக கர்நாடக மாநில அரசின் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. அங்கு பாஜக அரசு நடக்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கிருந்து வரும் பேருந்தில் பயணம் செய்யும் பயணி யார்? அவரது பெயர், வயது போன்ற விபரங்களை பதிவு செய்து, நபருக்கு ரூ 50 வீதம் காப்பீட்டு கட்டணம் செலுத்தி அரசின் போக்குவரத்துத் துறையின் அனுமதி பெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இது மக்களிடம் தெரிவித்ததும் சூரிய வெப்பத்தில் காணாமல் போகும் பனி நீர் போல் வேலை எளிதாக முடிந்தது.

கர்நாடகத்தில் இருந்து வரும் பேருந்து ஓட்டிகள் தமிழ் நாட்டின் சாலை வழிகளையும், போக்குவரத்து விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் அறிந்திருக்கவில்லை. இது தொடர்பாக காவல்துறை அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. பெரும் எண்ணிக்கையில் கூடும் உழைக்கும் மக்கள் பேரணி அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடந்தேற வேண்டும் என்பதில் காவல்துறையும் அக்கறை காட்டி உதவி புரிந்ததை நன்றி உணர்வு ததும்ப எஸ்.மோகன்குமார் எடுத்துக் கூறினார்.

உழைக்கும் மக்கள் குடும்பத்தை சேர்ந்த இளைஞர்கள், இளம் பெண்கள் மக்கள் தொண்டர் படையில் இணைந்து செயல்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பெயர் பதிவு செய்து கொண்டனர். இவர்கள் பயிற்சியிலும் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவருக்கும் காலத்தில் சீருடையும், தொப்பி. காலணி போன்றவைகளும் வழங்க முடியாததால் 269 சீருடை அணிந்த மக்கள் தொண்டர் படை வீரர்கள் மட்டுமே பவானிசாகர் தொகுதியில் இருந்து அணி வகுப்பில் பங்கேற்க முடிந்தது என ஆதங்கப்பட்டனர்.

இவைகள் அனைத்தயும் ஒரு சேர பரிசீலித்த கூட்டம், பேரணிக்கு திட்டமிட்ட பணியில் 80 சதவீதம் நிறைவேறி யிருப்பதை உறுதி செய்து, பெருமிதம் கொண்டது. இன்னும் 20 சதவீதம் தோழர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டியதை பொறுப்புணர்வோடு கூட்டம் குறித்துக் கொண்டது.

சரி. அடுத்து என்ன?

வரும் டிசம்பர் 25, 26 தேதிகள் கட்சியின் 98 வது அமைப்பு தினம். இந்த அமைப்பு தினத்தில் பவானிசாகர் தொகுதியில் 500 இடங்களில் கட்சியின் செங்கொடி ஏற்றும் நிகழ்ச்சி திட்டமிடப்பட்டது. இதில் வர்க்க வெகுமக்கள் அமைப்புகளின் கொடிகளை கணக்கில் சேர்க்கக் கூடாது என்று தெளிவுபடுத்தப்பட்டது.இதனைத் தொடர்ந்து வரும் 2024 டிசம்பர் மாதம் பவானிசாகர் தொகுதியில் உள்ள 25 ஆயிரம் வீடுகளில் தியாகச் செங்கொடி ஏற்றுவது என்று இலக்கு நிர்ணயித்து, அதற்கான வேலைத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

**பல நாள் பட்டினி கிடக்கும் சிங்கம் பிடறி சிலிர்த்து இரை தேடுவதற்கு விரைவது போல், சமூக நீதி ஜனநாயக வேட்கை கொண்ட கம்யூனிஸ்டுகள் களம் இறங்கத் தயார் என தெரி-வித்தனர். அதில் அறிவு முதிர்ச்சியும், ஆவேச முனைப்பும் வெளிப்பட்டதை கூட்டத்தில் எழுந்த பலத்த கரவொலி மூலம் உறுதி செய்தது.**

கட்சியின் சிவகங்கை அமைப்புநிலை மாநாட்டு தீர்மானமும். கட்சியின் அமைப்பு நிலை அறிக்கைகள் முன் வைத்திருக்கும் ஆலோசனைகளும் பூத்துக் குலுங்கும் மலர்த்தோட்டம் போல் தோழர்கள் நடைமுறையில் செயல்வடிவம் பெற்றிருந்ததை காணும் போது உடல் சிலிர்த்தது. உள்ளம் மகிழ்ந்தது.

வெற்றியின் ரகசியம் வேறெங்கும் இல்லை. திட்டமிட்ட பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அரசியல் உணர்வின் உந்துதலும் , அமைப்பு சார்ந்து, அதில் உள்ள உறுப்பினர்களோடு கலந்து செயல்படும் முனைப்பிலும் வெற்றியின் ரகசியம். இது பவானிசாகர் தொகுதி கட்சி உறுப்பினர்கள் எடுத்துரைக்கும் அனுபவப் படிப்பினையாகும்.

இங்கு கட்சி அமைப்புகள். வர்க்க தளங்களில் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரோடி வருவதற்கு , இங்கு கட்சி அமைப்பின் பணிதான் வாழ்க்கை என அர்பணித்துக் கொண்ட 25க்கும் மேற்பட்ட முழுநேர ஊழியர்கள் இடைக்குழு செயலாளர்கள் இடைக்குழு உறுப்பினர்களின் கூட்டு உழைப்பும் உயிர்நாடியாகும்.

இங்கு வாரந்தோறும், பிரதி சனிக்கிழமை தோறும் ஊழியர்கள் கூடுவதும், திட்டமிடுவதும், செய்த பணி களை மறு வாரம் பரிசீலிப்பதும், அன்றாடம் இரவு பத்து மணிக்குள் ஊழியர்கள் தங்களின் அன்றைய பணி களை கட்சி மையத்திற்கு அறிக்கை செய்வதும் ஒரு இயல் பான காலமுறைப் பணியாகியிருப்பதுதான். ஊழியர் களும், கட்சிப் பொறுப்பாளர்களும் வாராவாரம் எழுத்துபூர்வ மாக(கட்சிப்பணி,சங்கப்பணி,தனிநபர் சேவைகள் என்ற அடிப்படையில்) வேலை அறிக்கை வழங்க வேண்டும்.

இவைகளை பெறும் கட்சி மையம் வேலைகளை கூட்டாக பரிசீலிப்பதையும் வழக்கமாக கொண்டிருப்பதும் நாம் உடனடியாக பின்பற்றத் தக்க நல்ல உதாரணமாகும்.

பவானிசாகர் தொகுதியில் பணியாற்றி வரும் தோழர்களை வாழ்த்துவோம். நாமும் அவர்களை போல் செயலில் ஈடுபடுவோம்......

வகுப்புவாத, மதவெறி சக்திகளையும், பன்னாட்டு கார்ப்பரேட் சக்திகளின் ஆதிக்கத்தையும் முறியடித்து, ஜனநாயக புரட்சியை முன்னெடுத்து, இறுதி வெற்றி பெறுவோம்.

தொடர்புக்கு: **94431 18544**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 21

## என்.டி.டி.வி.யை வளைத்த அதானி!

பணம் பத்தும் செய்யும் என்பது பழமொழி. ஆனால், பதினோராயிரமும் செய்யும் என்பது உலகமய அரசியல் புதுமொழி! இந்திய ஜனநாயகத்தின் மிகப்பெரும் அடிப்படைகளை பண வெப்பத்தில் இலக வைப்பதற்கான பெரும் முயற்சி தொடர்ந்து வருகிறது.

ஜனநாயகத்தின் அடிப்படைத் தூண்களான நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள் இன்று பண ஆதிக்கத்தின் பதுங்கு குழிகளாக மாறிவிட்டன. ஜனநாகத்தின் மிக கம்பீரமான தேர்தல் முறை பண ஆதிக்கத்தின் கீழ் கவிழ்ந்து விட்டது! பணத்திற்கு வாக்கு விற்பனை என்பது பட்டவர்த்தனமாகி விட்டது! இதைத் தடுப்பதற்கோ தேர்தல் முறையில் தீவிர சீர்திருத்தம் கொண்டு வருவதற்கோ தேர்தல் ஆணையம் திணறிப் போய் இன்று வாய் மூடி மவுனியாகிவிட்டது.

இலவசங்கள் குறித்து இந்திய அளவில் விவாதம் நடத்தும் உச்சநீதிமன்றம் ஜனநாயகத்தை நாறடிக்கும் இது குறித்து ஏன் விவாதிக்கக் கூடாது?

ஜனநாயகத்தின் நான்காவது தூணான பத்திரிகை சுதந்திரத்தை நரேந்திர மோடியின் பா.ஜ.க. அரசு தொடர்ந்து பந்தாடி வருகிறது. நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு அதானிக்கும் அம்பானிக்கும் பந்தி வைத்தாயிற்று.

போதாக்குறைக்கு பத்திரிகை துறையிலும் தனக்கான செய்திகளை உருவாக்கவும் பரப்புவதற்குமான அனைத்து ஆயத்தப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. வதந்திகளைப் பரப்ப, வகுப்பு வெறி, மதவெறியைப் பற்ற வைக்க இணையங்கள் தோறும் சமூக வலைதளங்கள் அனைத்தையும் இந்த சமூக விரோத செய்திகளை பரப்ப பயன்படுத்தி வருகிறது.

வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் தொடர்ந்து பொய் செய்திகளையும், வதந்திகளையும் பரப்புவதோடு பிரதமர் நரேந்திர மோடியின் அருமை பெருமைகளை பரப்ப அவரது பிம்ப கட்டுமானத்திற்காக இவை முழுக்க முழுக்க பயன்படுத்தப்படுகின்றன.

அப்படி இருந்தும், ஆல்ட் நியூஸ் (Alt News) என்ற மாற்று ஊடகத்தை நிறுவி அந்தப் பொய்கள் ஒவ்வொன்றையும் அம்பலப்படுத்தி வந்தது. எனவேதான் அடக்க முடியாத சினத்தோடு, முஹமது சுபைர் இன்று சிறைச்சாலையில் வதைக்கப்பட்டு வருகிறார். அவருக்கு பிணைகூட மறுக்கப்படுகிறது.

நியூ டெல்லி டெலிவிஷன் லிமிட்டெட் என்ற பெயரில் (NDTV) கடந்த 1988 ஆம் ஆண்டு ஒரு சுதந்திரமான 24/7 செய்திச் சேனல் தொடங்கப்பட்டது. இந்த வகையில் தொடங்கப்பட்டதில் இந்தியாவில் இதுவே முதன்மையான சேனலாகும்.

464 பேர் இதில் பணியாற்றுகின்றனர். இதனுடைய அமைப்பாளர்களாக பிரனாய் ராயும், ராதிகா ராயும் இருந்து செயல்படுகின்றனர். பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். சங்பரிவாரின் அத்தனை மத வெறி அரசியலுக்கும் மக்கள் விரோத அரசின் செயல்பாடுகளுக்கும் காத்திரமான எதிர் கருத்துக்களை நடுநிலையோடு எடுத்து வைப்பதில் முன்னணியில் உள்ளது இந்நிறுவனம். விடுவார்களா மோடியும் அதானியும்!

பத்தாண்டுகளுக்கு முன்பு விசுவ பிரதான் கமர்சியல் பிரைவேட் லிமிடெட் என்ற வி.பி.சி.எல். மூலம் 50 மில்லியன் டாலர் கடன் வாங்கியிருந்தது என்.டி.டி.வி. அதன் மூலம் என்.டி.டி.வி.யின் பங்கில் 29.18% அந்நிறுவனம் தன்னகத்தே கொண்டிருந்தது. கடந்தாண்டு அதானி மீடியா வென்செஸ் லிமிடெட் குழுமத்தின் சார்பில் அதானி என்டர்பிரைசஸ் லிமிடெட் உருவாக்கப்பட்டு அதன் கீழ் ஊடகப் பிரிவான குயின்டிலியன் பிஸ்னஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் (QBM) என்ற டிஜிட்டல் வணிகச் செய்தித் தளத்தை வாங்கியது அதானிக் குழுமம்.

இதன் மூலம் தான் வி.சி.பி.எல். நிறுவனத்தை வலைத்து வாங்கி இன்று என்.டி.டி.வி. ஐ வாங்கி விட்டதாகச் சொல்கிறது. என்.டி.டி.வி.யில் மேலும் 26% பங்குகளை வாங்கி, அதாவது 55% பங்குகளை பெற்று என்.டி.டி.வி நிர்வாகம் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர தனது நண்பர் பாரதப் பிரதமர் மோடிக்காக இந்த பகீரத முயற்சிகளை எடுத்து வருகிறது அதானி குழுமம். என்.டி.டி.வி.யின் நிறுவனர்களான பிரனாய் ராயும், ராதிகா ராயும் இணைந்து 32% பங்குகளை இப்போதும் அவர்கள் கொண்டுள்ளார்கள்.

இவ்விஷயத்தில் தங்களுடன் எந்தவிதத்திலும் கலந்து ஆலோசிக்காமல் பேச்சுவார்த்தை நடத்தாமல் என்.டி.டி.வி.யின் பங்குகளை அதானி நிறுவனம் வணிக முறைக்கு எதிராக வாங்கி உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

பத்திரிகை தர்மத்தில் நாங்கள் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ள மாட்டோம் என்பதில் உறுதியோடு இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருப்பது மகிழவான செய்தி!

ஒன்று செய்தி நிறுவங்கள் அனைத்தும் தங்களது ஊதுகுழலாக இருக்க வேண்டும், எதிர்கருத்துக்கள் சொல்லும் ஊடகமாக இருந்தால் அதனை அரசின் அதிகார பலத்தின் மூலமும், தனக்கு ஆதரவான பெரும் நிறுவனங்கள் மூலமும் வளைத்து போடுவது என்பதுதான் பா.ஜ.க. அரசின் ஒரே அறிவிக்கப்படாத விதியாக மாறிப்போய் விட்டது. மாற்றுக் கருத்து இல்லாத ஜனநாயகம் என்பது சகிப்புதன்மையற்ற சர்வாதிகாரம். மாற்றை அழிப்பதன் மூலம் ஜனநாயகத்தை அழிப்பதே பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ்.சின் பெரும் விருப்பம்! ஜனநாயகம் காத்திட நாட்டு மக்கள் பொங்கி எழ வேண்டிய தருணம் இது!




# உள்ளடக்கமும் – உருவமும்

- எஸ். தோதாத்ரி

**தத்துவ வகையினங்களில் அதிகம் பேசப்படுவது உள்ளடக்கமும் – உருவமும் ஆகும். உள்ளடக்கம் என்பது ஒரு பொருள் அல்லது ஒரு கருத்தமைப்பு ஆகியவற்றில் காணப்படும் அனைத்து அம்சங்களையும் குறிக்கிறது. இயங்கியல் முறைப்படி இதற்கு தீர்மானிக்கும் திறன் உண்டு. பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் உள்ளடக்கம் உயிர் என்றும், உருவம் உடல் என்றும் கூறுவார். இவை இரண்டிற்கும் உள்ள உறவு பற்றி விவாதங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. குறிப்பாக கலை, இலக்கியத் துறைகளில் மிக முக்கியமாக இடம் பெறுகிறது.**

உள்ளடக்கம் என்பதை இப்போது காண்போம். உதாரணமாக அணுவில் மிகச் சிறியது ஹீலியம் என்பதன் அணு. இதன் அமைப்பில் ஒரு புரோட்டான், ஒரு எலக்ட்ரான் ஆகியன உள்ளன. இது இதன் உள்ளடக்கம். இதன் வடிவம் ஹீலியம் என்று அழைக்கப்படுகிறது. புரோட்டான் எண்ணிக்கை கூடும் போது உள்ளடக்கம் மாறிவிடுகிறது. அதன் காரணமாக வடிவமும் மாறிவிடுகிறது. இந்த அணுக்கள் ஒன்றுடன் ஒன்று கூடும்போது அமைப்பு மாறுகிறது. உதாரணமாக ஹைட்ரஜன், ஆக்சிஜன் ஆகிய இரண்டும் வெவ்வேறான உள்ளடக்கம் உள்ளவை. ஆனால் இவை இரண்டும் கூடும்போது தண்ணீராக மாறுகிறது. இது புதிய வடிவம். இந்த வடிவத்திற்கு காரணம் அதிலுள்ள உள்ளடக்க கூடுகை ஆகும்.



சமுதாய வளர்ச்சியில் இவை இரண்டுமே மிக முக்கியமானவை. ஆதிப் பொதுவுடைமை சமுதாயத்தில் தனிச்சொத்து என்பது கிடையாது. இரத்த சம்பந்தமான உறவுள்ள மக்கள் தனித்தனி கூட்டம், கூட்டமாக வாழ்ந்தனர். இவர்கள் எல்லோரும் கூட்டாகவே தொழில் செய்தனர். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், உணவுப் பொருட்களைச் சேகரித்தல் ஆகிய காலகட்டத்தில் இருந்தனர். இதன் காரணமாக இந்த உள்ளடக்கத்திற்கு ஏற்றபடி ஒரு சமுதாய அமைப்பு இருந்தது. அதனை ஆதிப் பொதுவுடைமை சமுதாயம் என்கிறோம். இதன் கூறுகளை சங்ககாலத்தில் காணலாம். பல பாடல்களில் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல் ஆகியன போன்ற விவரங்கள் இடம்பெறுகின்றன. கொண்டுவந்த பொருட்களை அமர்ந்து எல்லோரும் பகிர்ந்து உண்டனர். இதற்கு ஏற்ற முறையில் சமுதாய அமைப்பு இருந்தது. இந்த வடிவத்தைத்தான் ஆதி பொதுவுடைமைச் சமுதாயம் என்று அழைக்கிறோம்.

ஆனால், இந்த உள்ளடக்கம் அப்படியே நிலைத்து நிற்கவில்லை. தொழில்முறையில் பல மாறுதல்கள் தோன்றின. உணவு சேகரிக்கும் பழக்கத்திலிருந்து, உணவை உற்பத்தி செய்யும் விவசாயம் தோன்றுகிறது. சிறு சிறு நிலப்பரப்பில் கூர்மையான கம்புகளைக் கொண்டு உழவு செய்து தானியங்களை பயிரிடும் முறை தோன்றியது. இது முதலில் கூட்டாகச் செயல்பட்டு அதன் பின்னர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரிய தனி நிலமாக மாற்றம் பெற்றது. இப்பொழுது சற்று வசதி குறைந்தவர்கள், சற்று வசதி உள்ளவர்கள் நிலத்தில் வேலை செய்யும் பணியாளர்களாக மாறத் தொடங்கினார். இது இனக்குழு மக்களுக்கு இடையே நடந்த மோதல்கள் காரணமாக பலர் அடிமைகளாக்கப்பட்டனர். இந்த உள்ளடக்கத்தின் புற வடிவத்தைத் தான் நாம் அடிமைச் சமுதாயம் என்கிறோம்.

இந்த உள்ளடக்கமும் நிலைத்திருக்கவில்லை. அடிமைகள் பலர் நடத்திய போராட்டங்கள் காரணமாகவும், நிலப்பரப்பு அதிகரித்ததன் காரணமாகவும் இந்த அமைப்பானது நிலவுடைமைச் சமுதாயமாக மாறியது. இதில் பெரும் பெரும் பிரபுக்கள், அரசர்கள் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொண்டு அவற்றில் நிறைய பேரை வேலைக்கு அமர்த்தினர். இவர்கள் அடிமைகளைப் போன்ற உரிமைகள் எதுவும் இல்லாதவர்கள் அல்ல. இவர்களுக்கு சிறுசிறு சுதந்திரங்கள் உண்டு. இவர்கள் சுயமாக தொழில் செய்யவும் முடியும். இந்த அமைப்பினைத்தான் நிலவுடைமை அமைப்பு என்று கூறுகிறோம். இங்கு நிலம் முழுவதுமாக தனிச் சொத்தாக மாறிவிடுகிறது. இது இதன் உள்ளடக்கம். இதன் புறவடிவம் நிலவுடைமை அமைப்பு.

இந்த அமைப்பும் மாறத் தொடங்கியது. இந்த மாறுதல் மேலை நாடுகளில் விரைவாகவும், இந்தியா போன்ற நாடுகளில் தாமதமாகவும் இடம்பெற்றது. உதாரணமாக இங்கிலாந்தில் கைத்தறி நெசவில் இந்த மாறுதல் முதலில் இடம் பெற்றது. ஒரு தொழிலாளி நூல் நூற்பதற்காக கருவி ஒன்றை கண்டுபிடித்தான். இதற்கு ஜென்னி என்று பெயர். இது பாரம்பரியமாக எட்டு பேர் சேர்ந்து வேலை செய்வதை ஒரு ஜென்னி செய்து முடித்தது. இதன் விளைவாக அங்கு நெசவாளர் குடும்பங்களில் வேலை இழந்தவர்கள் அதிகரித்தனர். இவர்கள் நகரத்தை நோக்கிச் சென்றனர். இந்த எந்திரங்களைத் தங்களது சொந்தக் கருவிகளாக ஆக்கிக் கொண்ட நகர்ப்புறத்து வணிகர்கள், மத்திய தர வர்க்கத்தினர் ஆகியோர் முதலாளிகளாக மாறினார். நகர்ப்புறம் நோக்கி வந்த வேலை இல்லாத பல கிராமவாசிகள் பாட்டாளிகளாக மாறினர். இது படிப்படியாக பல துறைகளில் விரிவடைந்தது. இதைத்தான் நாம் முதலாளித்துவ அமைப்பு என்று கூறுகிறோம்.


இந்த முறையை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தி சோவியத் யூனியனில் முதல் சோசலிச சமுதாயம் உருவாயிற்று. இந்த அமைப்பின் உள்ள டக்கம் எல்லோருக்கும் சம வாய்ப்பு, எல்லோருக்கும் வேலை, தனிச்சொத்து ஒழிக்கப்பட்டது. பெரும் பெரும் பண்ணையார்கள், முதலாளிகள் ஆகியோரது சொத்து தேசவுடைமையாக்கப்பட்டது.

கலை, இலக்கிய உலகில் இது அதிகம் பேசப்படுகிறது. ஒவ்வொரு கலைப் படைப்பும் அதன் உள்ளடக்கத்தைப் பொறுத்து அமையும். இந்த உள்ளடக்கம்தான் அதன் வடிவத்தை தீர்மானிக்கும். உதாரணமாக சாரு நிவேதிதா அவர்களின் நாவல்களின் உள்ளடக்கம் இன்றைய சமுதாய அமைப்பாகும். இந்த அமைப்பில் எல்லாமே தனித்தனியாக காட்டப்படுகின்றன. இதற்கு ஏற்றபடி பின்நவீனத்துவம் போன்ற தத்துவங்கள் உள்ளன. இந்த உள்ளடக்கத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக, அவரது நாவல்களில் வடிவம் முற்றிலும் வித்தியாசமாக உள்ளது. அவரது நாவல்களில் தர்க்கரீதியான கதை அமைப்பு கிடையாது. துண்டுதுண்டாக தொடர்பற்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும். ஒரு கால ஒழுங்கு என்பது இருக்காது. பத்திரிகைச் செய்திகளும், துண்டுதுண்டான விவரங்களும் இந்த நாவல்களில் அதிகம் இடம்பெறும். இந்த வடிவமானது இன்றைய சமுதாய உள்ளடக்கத்தின் பிரதிபலிப்பாகும்.

**உள்ளடக்கத்திற்கு தீர்மானிக்கும் சக்தி உண்டு என்றாலும், உருவம் செயலாற்ற ஒன்றாக இருப்பது இல்லை. அது உள்ளடக்கத்தின் தன்மையை மூடி மறைப்பதற்காகவே இருக்கக்கூடும்.**

உதாரணமாக இந்திய சமுதாயத்தைப் பற்றி மார்க்ஸ் கூறும் போது தேக்கநிலை சமுதாயம் என்று கூறுவார். மாறாத் தன்மை உள்ளது என்றும் கூறுவார். இதற்குக் காரணம் இந்திய சமுதாயத்தினுடைய சுய தேவை பூர்த்தி என்ற அம்சமானது அதற்கு உள்ளே அடிப்படையில் மாறுதல்களை நிகழ்த்திக் கொண்டிருந்தாலும் அவற்றை மூடியே மறைத்து விட்டது. ஆனால் ஐரோப்பியர்கள் வரும்போது மாறுதல் விரைவாக இடம் பெறத் தொடங்கியது. உருவத்திற்கு உள்ளடக்கத்தின் மாறுதலைத் தடுக்கும் திறன் உள்ளது. அதில் மாறுதல்களைக் கொண்டு வரும் திறன் அதற்கு உண்டு. இந்த இயங்கியல் உறவையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். மொத்தத்தில் உள்ளடக்கத்திற்கு தீர்மானிக்கும் சக்தி உண்டு. உருவம் அதன் வெளிப் போர்வையாக விளங்குகிறது எனலாம்.

தொடர்புக்கு: 98947 83657



- ஏ.இ.பாலுச்சாமி

# இலவசங்கள்!



## அரசுகளின் பொருளாதாரத்தை சீரழிக்கிறதா? சீர்படுத்துகிறதா?

**ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவசங்கள், மானியங்கள் தேவையா? தேவையில்லையா? என்ற விவாதத்தை தொடங்கி வைத்துள்ளார் பிரதமர் மோடி. ஒரு திட்டத்தை ஒழிக்க அவர் திட்டமிட்டு விட்டால், அதற்கு முன்பு ஒரு விவாதத்தை தொடங்கி வைத்து, பின் ஒழிப்பது அவரது பாணி. விவாதத்தை தொடங்கிடாமலேயே ஒழிப்பதும் அவரது தனி பாணி.**

பொருளாதார நிபுணர்களையோ, மத்திய ரிசர்வ் வங்கி ஆளுநரிடமோ கேட்காமலேயே திடீரென்று அறிவித்து ரூ.500, ரூ.1000 நோட்டுகளை ஒழித்தார். விவசாயிகளை கலந்தாலோசிக்காமலேயே விவசாயிகளுக்கு எதிராக எம்.எஸ்.பி. ஐ ஒழித்திட புதிய விவசாய சட்டங்களை திடீரென அறிவித்தார். தொழிற்சங்கங்களை கலந்து பேசாமலேயே தொழிலாளர் நலச்சட்டங்கள் 44ஐ ஒழித்து 4 சட்டங்களாக்கினார். ரிசர்வ் வங்கி ஆளுநரை கேட்காமலேயே தேசிய வங்கிகளை ஒழித்து வருகிறார். விவாதிக்காமலேயே பொதுத் துறைகளை ஒழித்து தனியாரிடம் விற்று வருகிறார். இவை மோடியின் எட்டாண்டு கால ஒழிப்பு சாதனைகளுள் சிலவாகும்.

தற்போது ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவசங்களை ஒழித்துவிட முடிவுகட்டி, ஒரு விவாதத்தை கிளப்பியுள்ளார் மோடி. தனக்குத் துணையாக உச்ச நீதிமன்றத்தையும் நாடியுள்ளார். இப்பிரச்சனை தற்போது உச்ச நீதிமன்றத்தில் உள்ளது.

சமீபத்தில் உச்சநீதிமன்றம் இலவசங்கள் குறித்து முடிவெடுக்க குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பிரதிநிதிகள், நிதி ஆயோக் அதிகாரி, ஒன்றிய நிதி அமைச்சக அதிகாரி, ரிசர்வ் வங்கி அதிகாரி, பொருளாதார நிபுணர்கள் சிலர் இடம் பெறுகிறார்கள்.

அரசுகள் வழங்கும் இலவசங்களால், ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி நிலை பாதிக்கப்படுகிறதா? அரசுகள் கடன் வலையில் சிக்கித் தவிக்கின்றனவா? அடிப்படை கட்டமைப்பு பணிகள் பாதிக்கப்படுகின்றனவா? இத்தனை விவரங்களைத் திரட்டி அக்குழு உச்ச நீதிமன்றத்திற்கு அறிக்கையினை வழங்க உள்ளது. ஒன்றிய அரசு இதற்கென தனிச் சட்டங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

சிபிஐ, அமலாக்கத் துறை, வருமானவரித்துறை போன்றவற்றை தனது ஏவல் நாய்களாக மாற்றியுள்ள மோடி, நீதித் துறைகளிலும் பெரும் அளவில் தனது செல்வாக்கை செலுத்துகிறார் என்ற பரவலான கருத்துக்களை நாம் புறக்கணித்துவிட முடியாது. எனவே இக்குழுவின் பரிந்துரை இலவசங்களை ஒழிப்ப தாகவே இருக்கும் என்பதை நாம் இப்போதே யூகிக்க முடியும்.

இலவசங்களுக்கு எதிராக ஒரு விழாவில் பேசிய மோடி, இதனை அபாயகரமான, அருவருக்கத்தக்க மோசமான கலாச்சாரம் என்று கூறினார். இது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் எதிரானது என்றார். இலவச அறிவிப்புகளை எதிர்க்கட்சிகள் தேர்தல் வெற்றிக்கு பயன்படுத்துகின்றன என்றார் மோடி.

இதே விழாவில் கலந்து கொண்ட உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் என்.வி.ரமணா, இலவசங்கள் குறித்து ஒன்றிய அரசு, ஒரு தீர்க்கமான முடிவினை மேற்கொண்டு, இப்போக்கினை கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினார். இலவசங்கள் பற்றி தேர்தல் வாக்குறுதியாக அறிவித்து, அரசியல் கட்சிகள் ஓட்டுக் கேட்பதை தடை செய்ய வேண்டும் என்று மோடிக்கு ஒத்து ஊதினார் நீதியரசர்.

இவர்கள் குறிப்பிடும் இலவசங்கள் எவை? எவை? ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவச அரிசி, மானிய விலையில் உணவுப் பொருட்கள், ஏழை பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு, புத்தகம், மிதிவண்டி, மடிக்கணினி, பஸ்பாஸ், ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தொலைக்காட்சிப் பெட்டி, கிரைண்டர், மிக்ஸி, இலவச மின்சாரம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம், குறைந்த பட்ச ஆதார விலை, நூறு நாள் வேலைத்திட்ட கூலி, மக்களுக்கான இலவச மருத்துவம் ஆகியவைகள் அடங்கும். இவைகளை ஒழித்திடவே மோடி திட்டமிடுகிறார்.

இவைபோன்ற இலவசங்களை அரசுகள் வழங்குவதால் ஏற்படும் சமூக பொருளாதார மாற்றங்கள், மக்களின் வாழ்க்கைத்தரம் பற்றி அரசியல், பொருளாதார அறிஞர்கள் கூறுவது என்ன? இந்தியா ஏழைகள் மிகுந்த நாடு. நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆகியும் மக்களின் அடிப் படைத் தேவைகளைக் கூட அரசுகள் பூர்த்தி செய்ய வில்லை. இன்றும் வறுமை தலைவிரித்தாடுகிறது.

நாட்டின் 90% பொருளாதார வளம் மேல்தட்டு கோடீஸ்வரர்களிடமும், எஞ்சிய 10% பொருளாதாரம் 90% மக்களிடமும் உள்ளது. தேசிய வருமானம் ஏழை எளியோருக்கு பகிர்ந்து அளிக்கப்பட வில்லை. இதனால் இலவசங்கள் அடித்தட்டு ஏழை, எளிய மக்கள், விவசாயிகள், மாணவர்கள் பிரிவினர்களுக்கு பேருதவியாக அமைகிறது. குறிப்பாக இப்பகுதியினரின் கல்வி, சுகாதார மேம்பாட்டிற்கு உதவுகிறது. இலவசங்கள் வறுமை ஒழிப்பு நோக்கம் கொண்டவை. இதனால் மனித வளம் மேம்படுகிறது.

அரசியல் சாசனத்தின் வழிகாட்டல் நோக்கங்களும், மக்களிடையே நிலவும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவது அரசுகளின் தலையாய கடமை என்பதை வலியுறுத்துகின்றன என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இன்று இலவசங்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள மோடி, கார்ப்பரேட்டுகளுக்கு பல லட்சம் கோடி ரூபாய்களை வாரி வாரி வழங்கி வருகிறார். கார்ப்பரேட்டுகள் தொழில் தொடங்க இலவசமாக நிலம், தண்ணீர், குறைந்த விலையில் மின்சாரம், முதல் பத்து ஆண்டுகளுக்கு வரியிலிருந்து விலக்கு, குறைந்த வட்டி வீதத்தில் வங்கிக்கடன் வசதி என பட்டியல் நீளுகிறது.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டிரம்ப், குஜராத்திற்கு வருகை தந்தபோது கார்ப்பரேட்டுகளுக்கான வரியினை 30% லிருந்து, 18% மாக குறைத்து அறிவித்து பாராட்டை பெற்றார் மோடி. இதனால் அரசுக்கு 1.84 லட்சம் கோடி நிதி இழப்பு ஏற்பட்டது. இதனால் 30 ஆயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் கம்பெனிகள் இலாபம் ஈட்டின.

மோடியின் நண்பர் அதானி அரசு வங்கிகளில் வாங்கிய 72 ஆயிரம் கோடி ரூபாயை மோடி தள்ளுபடி செய்தார். கடந்த 5 ஆண்டுகளில் வங்கிகள், கார்ப்பரேட் நிறுவனங்கள் திரும்பக் கட்டாத வாராக் கடனை தள்ளுபடி செய்த தொகை 7.27 லட்சம் கோடியாகும். இவற்றோடு ஒப்பிடும்போது, இலவசங்களுக்கு செலவிடும் தொகை ஒரு லட்சம் கோடிக்கும் குறைவாகவே இருக்கும்.

இது குறித்த வழக்கில் தமிழக அரசு தன்னை பிணைவாதியாக இணைத்துக் கொண்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் இவ்வரசு தாக்கல் செய்த உறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் சில. இந்தியாவில் எந்த மாநிலமும் வழங்காத பல இலவச திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் மக்களிடையே நிலவி வந்த பொருளாதார ஏற்றத்தாழ்வு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வளர்ச்சியில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. அனைத்து துறைகளின் வளர்ச்சியிலும் தமிழகம் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக உள்ளது.

பட்டப் படிப்பில் சேருவோர் 52% ஆக உள்ளனர். (அமெரிக்காவிலேயே இது 48% தான்.) சிறந்த கல்வி நிலையங்கள் 100ல் தமிழகம் 18 இடங்களைப் பெற்றுள்ளது. தொழில் வளர்ச்சி பெருகி வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளதால் இந்தி பேசும் வட மாநிலங்களில் இருந்து பல லட்சம் இளைஞர்கள் தமிழகம் நோக்கி வந்துள்ளனர். மருத்துவம், சுகாதாரத்துறையில் தமிழகத்திற்கு ஈடு இணை எதுவுமில்லை. சமூகநீதிக் கொள்கையை அமல்படுத்தி தமிழகம் தலைநிமிர்ந்துள்ளது. இவையெல்லாம் எண்ணற்ற இலவசங்கள் வழங்குவதால் தான் என கூறுகிறது தமிழக அரசு.

கார்ப்பரேட்டுகளுக்கு நிதிச் சலுகைகளை வழங்குவதால், லாபம் ஈட்டி தொழில் முதலீடு அதிகரிக்கும், வேலைவாய்ப்பு பெருகும் என ஒன்றிய நிதியமைச்சர் கூறுகிறார். அவ்வாறு நடந்திருந்தால் கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலையின்றி, அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக தீப்பிழம்பாய் எழுந்திருந்து ஏன் போராடினார்கள்? வருடம் 2 கோடி பேர், 8 ஆண்டுகளில் 16 கோடி பேருக்கு வேலை என சத்தியம் செய்த மோடி, ஏன் சில லட்ச வேலை களைக்கூட உருவாக்கவில்லை? கார்ப்பரேட் நாய்கள், மோடி போட்ட பிஸ்கெட்டுகளை சாப்பிட்டு ஏப்பம் விட்டு விட்டு துவங்குகிறதே ஒழிய எழுந்து நரியைப் பிடிக்கவில்லையே ஏன்?

**இலவசங்களுக்கு எதிராக ஏகடியம் பேசும் மோடி, தான் வந்த வழியை திரும்பிப் பார்க்கட்டும். கருப்புப் பணம் ஒழிக்கப்பட்டு வெளிநாட்டில் பதுக்கப்பட்டுள்ள பணத்தை இந்தியாவிற்கு கொண்டு வந்து 15 லட்சம் ரூபாயை இந்தியர் ஒவ்வொருவரின் வங்கி கணக்கில் போடுவேன் என்று தம்பட்டம் அடித்தது மக்களின் ஓட்டைப் பெறத்தானே. வருடம் 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு, விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல், உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 80 கோடி ஏழைகளுக்கு அரிசி வழங்குதல், கேஸ் இணைப்பில்லா வீடுகளுக்கும் இலவச கேஸ் மற்றும் மானியம், கழிப்பறை இல்லா வீடுகளுக்கு கழிப்பறை கட்டிட மானியம், விவசாயிகளுக்கு மானியம், இவையும் இன்ன பிற அலங்காரமான இலவசங்களை அறிவிப்பு செய்து, மக்களை ஏமாற்றி ஓட்டுகளைக் குவித்து இரண்டு முறை பிரதமரான மோடி, இலவசங்கள் ஒழிப்பு பற்றி பேசலாமா? இவை அருவருப்பான அறிவிப்பாக அன்று தெரியவில்லையா மோடிக்கு?**

2014 ல் ஆட்சிக்கு வந்த மோடி ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து அதாவது முஸ்லிம்களை, கிறிஸ்தவர்களை, கம்யூனிஸ்ட்களை கொன்று குவித்து இறுதியில் வெந்ததைச் சாப்பிட்டு விதி வந்தால் சாவோம் என்ற நிலையில், இலவசங்களால் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களை ஒழித்துக் கட்ட இலவசங்களை ஒழிக்க மோடி முண்டா தட்டுகிறார். மக்கள் கொதிப்படைந்து, கொந்தளித்து போய் உள்ளனர். 2024 நாடாளுமன்ற தேர்தலில் பிஜேபி ஆட்சியை ஒழித்திட ஏழை, எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள் சபதமேற்று விட்டனர். இந்தியாவின் புதிய சரித்திரம் இவர்களால் எழுதப்படுவது உறுதி. மோடி முகவரி இன்றி ஓரங்கட்டப்படுவார்.

தொடர்புக்கு: **94434 52458**

# இலக்கியப் பேராசான் ஜீவாவின் 116 வது பிறந்தநாள் நிகழ்ச்சி

**தோழர் ஜீவாவின் 116 வது பிறந்தநாள் தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.**




**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டியில் இலக்கிய பேராசான் தோழர் ப.ஜீவா அவர்களின் 116 வது பிறந்தநாள் நிகழ்ச்சி கலை இலக்கிய பெருமன்றம் திருத்துறைப்பூண்டி கிளையின் சார்பில் நடைபெற்றது. காமராஜர் சிலை அருகில் ஜீவாவின் உருவப்படம் மலரினால் அலங்கரிக்கப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக் கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு ஜீவாவின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் கோ. பழனிச்சாமி, கட்சியின் மாநில குழு உறுப்பினர் கே.உலக நாதன்எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலக்குழு உறுப்பினர் க.மாரி முத்து எம்.எல்.ஏ., மாநிலக்குழு உறுப்பினர் அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், எஸ். தமயந்தி மாவட்ட நிர்வாகக்குழு, மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம். வையாபுரி, வி.முத்துக்குமரன், கே.பாலு, எம்.முருகேசன், வி.ஜவகர் ஒன்றியச் செயலாளர், டி.பி.சுந்தர் நகரச்செயலாளர், காங்கிரஸ் கட்சியின் நகர பொறுப்பாளர் எழிலரசன், கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் அ.குமரேசன் மற்றும் கிளையின் பெருமன்ற பொறுப்பாளர் சி.பாஸ்கர் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

**கன்னியாகுமரி :**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட குழு சார்பில் அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் உள்ள ஜீவா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.கே.கங்கா, நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். மூத்த தோழர் மரியதாஸ் மற்றும் ஆரல் சிபிஐ முன்னாள் நகரச்செயலாளர் எல்.சுப்பிரமணியம் ஆகியோர் ஜீவா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.ஆரல் கிளை செயலாளர் அருள்குமார், மாவட்டக்குழு உறுப்பினர்கள் பிரேமா கிருஷ்ணன், எஸ்.இசக்கிமுத்து, பேராசிரியர் சுந்தரம் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

குமரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் குமரி முனை காமராஜ் மணிமண்டபத்தில் இருந்து ஜீவா விழாவை முன்னிட்டு வாகன கருத்து பிரச்சாரம் பேராசிரியர் சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் பிரச்சாரத்தை துவக்கி வைத்தார்.வாகன பிரச்சாரத்தை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தோழரும் அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர் ஆர்.எம். பெருமாள், தோவாளை தாலுகா செயலாளர் அண்ணாத்துரை ஆகியோர் வாழ்த்தி பேசினர்.பிரச்சாரபயணத்தை நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தலைமை தாங்க மாநகர பொருளாளர் கே.நாகராஜன் மாநகர த்துணைச்செயலாளர்





ஜி.அய்யப்பன் ஆகியோர் பல பகுதிகளில் வாகனபிரச்சாரத்தை முன்னெடுத்து சென்றனர்.

**பூதப்பாண்டி:** கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் இலக்கிய பேராசான் ஜீவா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் த.க.இ.பெ. பொதுச் செயலாளர் த.அறம், மாநிலக் குழு உறுப்பினர் த.லெனின் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் விருதுநகர் மாவட்டம் சார்பில் மாநில குழு உறுப்பினர்



தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தஓவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி வி.இரவி, வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ ஆகியோர் ஜீவா சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

**வடசென்னை :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் சார்பாக ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள ஜீவா சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி மாலை அணிவித்தார்.

மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ்வேம்புலி, ஆர்.கே. நகர் தொகுதி செயலாளர் எம்.ஜெய்சங்கர், ஆர்.கே.நகர் பகுதி பொருளாளர் இராமலிங்கம், ஆர்.கே.நகர் தொகுதி துணை செயலாளர் இராஜசேகர், 42வது வட்ட மாமன்ற உறுப்பினர் எம்.ரேணுகா எம்.சி. மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

**பட்டுக்கோட்டை:** தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பாக ஜீவா பிறந்த நாள் விழா கவிக்குயில் டாக்டர் மு.செல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. கலை இலக்கியப் பெருமன்றச் செயலாளர் பாலதண்டாயுதம், சி.பக்கிரிசாமி, வழக்கறிஞர் பிரகாசம், சிபிஐ ஒன்றியச் செயலாளர் பூபேஷ் குப்தா, நகரச் செயலாளர் விஜயன், முன்னாள் செயலாளர்கள் எம்.எம்.சுதாகர், ரோஜா ராஜசேகரன், பிஎஸ்என்எல் சிதம்பரம், சிபிஐ நகரத் துணைச் செயலாளர் லெனின் மற்றும் வணிகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். எம்.எம்.சுகுமார் நன்றி கூறினார்.

**திருவாரூர்:** திருவாரூர் மாவட்டக் கட்சி அலுவலகத்தில் மாவட்டக் குழு உறுப்பினர் கே. புலிகேசி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில். கட்சியின் நகரச் செயலர் பழக்கடை செல்வம் ஜீவாவின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர் சௌரிராஜன், மு.மகாலிங்கம், நகர மற்றும் ஒன்றியத் தோழர்கள் திராளாக கலந்து கொண்டனர்.

கட்சியின் துணைச் செயலர் வீ.தர்மதாஸ் ஜீவாவின் தியாக வாழ்வை நினைவு கூர்ந்து சிறப்புரையாற்றினார். செயற்குழு உறுப்பினர் அன்னபாக்கியம் நன்றி கூறினார்.

திருவாரூர் நகர தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன் றம் சார்பாக திருவாரூர் வி.பி.கே. கூட்டஅரங்கில் த.க. இ.பெருமன்ற திருவாரூர் கிளைத் தலைவர் எம். நாகராஜன் தலைமை தாங்கினார்.

பெருமன்ற முன்னோடி தோழர் இ.செல்வமணி முன்னிலை வகுத்தார். ஜீவாவின் தியாக வாழ்வை தேன்மொழி சிறப்பாக பேசினார். மதிமுக தலைமை பேச்சாளரும், நகர முத்தமிழ் பண்பாட்டு பாசறைத் தலைவருமான ஆரூர் சீனிவாசன், திருவாரூர் தமிழ்சங்க செயலர் அறிவு, மு.சந்திரசேகரன் ஆகியோர் உரையாற்றினர்.

பெருமன்ற செயலர் வீ. தர்மதாஸ் சிறப்புரையாற்றி நன்றி கூறினார். புலவர் அ.ப.பாலையன் ஜீவாவின் வாழ்வை நினைவு கூர்ந்து சிறப்புரையாற்றினார்.

**தாம்பரம்:** தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன் றத்தின் காஞ்சிபுரம் மாவட்ட குழு மற்றும் ஜீவா பிறந்தநாள் விழா ஒருங் கிணைப்பு குழு சார்பில், மேற்கு தாம்பரம் ஜீவா அறக்கட்டளையின் அவ்வை நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற ஜீவாவின் பிறந்த நாள் கருத்தரங்கில் ஜீவா மணிக்குமார் தலைமை ஏற்றிருந்தார். கலை இலக்கியப் பெருமன்றத்தின் காஞ்சி மாவட்ட செயலாளர் கவிஞர் ராமலிங்கம் வரவேற்று பேசினார். கோவை மாவட்ட கலை இலக்கிய பெருமன்றத்தின் எஸ் செல்வகுமார் “வர்க்கப் போராளி ஜீவா” என்ற தலைப்பிலும் , மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் சிந்தன் “மார்க்சியமும் இன்றைய சூழலும்“ என்ற தலைப்பிலும் , இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலச் செயலாளர் ஜி. மஞ்சுளா, “பெண்ணியம் பற்றி ஜீவா” எனும் தலைப் பிலும் கருத்தரங்க உரையாற்றினார்.

அதற்கு முன்பாக தாம்பரம் ஜிஎஸ்டி சாலை ஜீவா வணிக வளாகம் முன்பு வைக்கப்பட்டுள்ள ஜீவாவின் திருவுருவச் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், முன்னாள் காஞ்சி மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன் ஏஐஒய்எப் சேகுவேராதாஸ், மருத்துவர் சாந்தி, டி.எஸ்.நடராஜன், ஜனசக்தி இசைக்கும்மணி, மூத்த தோழர் சி.லோகநாதன், ஜீவாமணிக்குமார் மற்றும் குடும்பத்தினர் ஜீவாவுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

---

>> 02ம் பக்கத் தொடர்ச்சி

வீட்டுவரியும்பன்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

மக்களின் துன்ப துயரங்கள் படிப்படியாக குறைவதற்கு மாறாக, பன்மடங்கு அதிகரித்த வண்ணம் உள்ளது.

இத்தகைய நிலையில் தான் நமது மாநில மாநாடு ஆகஸ்ட் 30ஆம் நாள் மறியல் அறப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது.

மூர்க்கத்தனமான மோடியின் அரசுக்கு தக்க பாடம் கற்பிக்கும் வகையில் நமது போராட்டம் அமைந்திடல் வேண்டும்.

ஆகஸ்ட் 30ஆம் நாள் தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு ஆயிரமாயிரம் தொண்டர்கள் அறப்போர் புரிய ஆயத்தமாக வேண்டும்.

ஒவ்வொரு காட்சிக் கிளையும் போராட்ட தயாரிப்பிலும், பங்கேற்பதிலும் முனைப்போடு செயல்பட வேண்டும்.

நமது ஆற்றல்மிகு கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

விலைவாசி உயர்வால் மிகவும் பாதிக்கப் படுபவர்கள் நமது தாய்மார்கள் தான்.

அவர்கள் தங்களின் சக்திவாய்ந்த எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் அணிதிரண்டு களம் காண வேண்டும்.

இன்றைய இளைய தலைமுறையினர் எடுத்துக்காட்டாய் விஸ்வரூபமெடுத்து போர்க்களம் காணவேண்டும்.

ஆகஸ்டு 30–ல் நடைபெறும் மறியல் போராட்டம் என்பது அடையாள போராட்டம் அல்ல. மாறாக மோடியின் மக்கள் விரோத, தேச விரோத, சர்வாதிகார பாசிச ஆட்சியை அகற்றுவதற்குரிய போராட்டம் என்பதனை நாம் உலகறிய செய்திடல் வேண்டும்.

மறியல் போராட்டம் குறித்து நன்கு விளம்பரங்கள் செய்திடுவீர் !

பொது மக்களின் பேராதரவை பெற்றிடுவீர் !

கரைபுரண்ட வெள்ளமென ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக ஓங்கி ஒலிக்கும் குரலோடு மறியல் போர்க் களத்தில் களம் காண்பீர் !

நமது போராட்டம் எட்டுத் திசைக்கும் எதிரொலிக்கட்டும் ! எத்திசை நோக்கினும் போர், போர் என முழங்கட்டும்.

திருப்பூரில் திரண்ட பெரும்படையே ! குமரனின் நகரை செங்கடலாக்கிய செம்படையே ! உன்னை மிஞ்சுவார் எவரும் இல்லை.

“அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைச் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே…
உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே”

என நமது முண்டாசுக்கவி பாரதி முழங்கினானே – அத்தகைய முழக்கம் அந்நியர் ஆட்சிக்கு எதிராக எழுப்பப்பட்ட போர் முழக்கம்.

இன்று பாரதி இருப்பாரேயானால் மோடியின் ஆட்சி கண்டு–

இதனைக் காட்டிலும் இன்னும் வேகமாக ஆவேச முழக்கம் எழுப்பி இருப்பான்–

மறியல் செய்தால் கைது, சிறை என்பதனை அறியாதவர் அல்ல நாம்.

எத்தனை நாள் – எத்தனை மாதம், வருடம் என்று தண்டனைகள் தந்தபோதும் அஞ்சமாட்டோம். முன்வைத்த காலை பின் வாங்க மாட்டோம் !

சிறைக் கொடுமைகளை, சித்திரவதைகளை, தடியடியை, துப்பாக்கிச்சூட்டை, தூக்கு மேடைகளை துச்சமெனக் கொண்ட புரட்சி பெரும் படையே போர்க்களம் காண வெகுண்டு எழுந்து வா !

நாம் களம் காண்போம். மக்களின் கண்ணீரைத் துடைப்போம் !

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**(இரா.முத்தரசன்)**



## சங்கே முழங்கு!

# சிக்கிச் சீரழிந்தது நம் தாயின் மணிக்கொடி!

**– வழக்கறிஞர் கீ.சு.குமார்**

**சுதந்திர தினத்தின் 75ஆவது தினத்தை முன்னிட்டு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மூளையில் உதித்த புதிய திட்டம் தான் வீடுகள் தோறும் தேசியக் கொடி எனும் விஷம் தோய்ந்த வியூகம்.**

வீடுகள்தோறும் கொடியேற்றுவது இருக்கட்டும்; வீடற்றவர்கள், சாமானியர்கள் தேசியக்கொடியை எங்கு ஏற்றுவது?

ஏழைகளின் கைகளிலிருந்து தேசத்தைப் பறித்துக் கொண்டு தேசியக் கொடியைக் கொடுப்பது எத்தகைய ஏமாற்றுவேலை? என சத்தமாகக் கேட்கத் தோன்றுகிறது.

கொரோனா தொற்று முதல் அலை பரவியபோது, கையை தட்டுங்கள், விளக்கு ஏற்றுங்கள், மந்திரம் ஓதுங்கள் என எதைச் சொன்னாலும் மூடப் பழக்கத்தில் ஊறித்திளைக்கும் வழக்கம் கொண்ட பெரும்பான்மை இந்தியர்கள் தேசியக் கொடியை ஏற்றுங்கள் என்று சொன்னவுடன் ஏற்றத் தொடங்கினார்கள். ஒருவர் அரைக்கம்பத்தில் ஏற்றினார், சிலர் தலைகீழாக ஏற்றினர், ஒருவர் தரையில் போட்டு கொடியின் மேல் உட்கார்ந்தார், ஒருவர் தேசிய கொடியை கீழே வைத்து அதே கம்பத்தில் பாஜக கொடியை ஏற்றினார், ஒருவர் தேசியக் கொடியை கொண்டு பரோட்டா சால்னாவை மூடி வைத்தார், ஒருவர் கழிப்பறை குழாயில் தேசியக் கொடியை செருகினார், இரவு, பகல் என இருட்டிலும் பறக்கவிடப்பட்டது. இதுவரை இந்தக் கொடிக்கு இருந்துவந்த மரியாதை அன்றோடு மூடு விழா நடத்தப்பட்டது. ஏனிந்த அவலம், இதில் என்ன அரசியல் என எண்ணிப் பார்ப்போம்.

1947 ஆகஸ்ட் 15 அன்று டெல்லி கோட்டையில் தேசியக் கொடி ஏற்றிய போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஆர்.எஸ்.எஸ். தங்கள் அலுவலகத்தில் கருப்புக் கொடியையும், காவிக் கொடியையும் ஏற்றியது. இன்றுவரை ஆர்எஸ்எஸ் தலைமையகம் நாக்பூரில் தேசியக் கொடி ஏற்றப்படுவது இல்லை.

நிலைமை இப்படி இருக்க தேசியக்கொடி மீது ஏற்பட்டிருப்பது திடீர் பாசம் அல்ல; அரசியல் வேஷம்.

ஒன்றிய அரசின் இந்த தேசிய கொடி ஏற்றும் அறிவிப்பால் கொடி மதிப்பிழக்கும், மரியாதையிழக்கும் என முன்கணிப்பு செய்த நாக்பூர் நரிக் கூட்டம், கொடி சட்டத்தையும் திருத்தச் சொல்லி திருத்தி விட்டது.

தேசியக் கொடி அவமதிப்புச் தடைச்சட்டம் 1971–ன் படி

இரவில் தேசியக் கொடியை பறக்க விடக்கூடாது.

காலையில் கொடி ஏற்றும் போதும் மாலையில் இறக்கும்போதும் மரியாதை செலுத்த வேண்டும்.

முழங்காலுக்கு கீழே கொடி இறக்கக் கூடாது.

பருத்தி நூலில் நூற்கப்பட்ட கதர் துணியில்தான் கொடி பயன்படுத்த வேண்டும்.

தேசியக்கொடியை சிதைப்பதோ, தீ வைப்பதோ, தேசியக்கொடி விதிகளை மீறுவதோ மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்க கூடிய குற்றமாகும்.

**பாஜக எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் தேசியக்கொடி சட்டம் திருத்தப்படுகிறது. வாஜ்பாய் ஆட்சியில் 2002 ல் தேசியக் கொடி சட்டம் திருத்தப்பட்டது. தற்போது மோடி ஆட்சியிலும் திருத்தப்பட்டுள்ளது. இத்தகைய திருத்தங்கள் தான் இன்று தேசியக் கொடி சீரழிந்து நிற்பதற்கு காரணம்.**

இந்தியாவில் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்த தேசியக்கொடி இம்முறை சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இனிமேல் இரவில் இருளில் பறக்க விடலாமா?

ஏற்றும் போதும், இறங்கும் போதும் மரியாதையோடு வணக்கம் செலுத்த வேண்டாமா?

தரையில் போட்டு வைத்து உட்காரலாமா?

ஆட்டோவில் கட்டி ஒன்வேயில் சென்று போலீசிடம் தண்டம் கட்டலாமா? என்ற கேள்விகளெல்லாம் நமக்கு எழுகிறது. தேசியக்கொடியை சீரழிக்கும் இந்நிலையை பாஜக – ஆர்எஸ்எஸ் ஏன் செய்கிறது?

ஒரே நாடு, ஒரே வரி, ஒரே மொழி என்ற வரிசையில் ஒரே கொடி அது காவிக்கொடி என்று காய் நகர்த்துகிறதோ? அதன்முன் நகர்வாய் மூவர்ணக் கொடி தன் மரியாதையை இழக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது.

திருப்பூர் குமரன் காத்த கொடி, சுதந்திர வேட்கையை தூண்டிய கொடி, புத்தரின் தம்ம சக்கரம் தாங்கியக் கொடி சிதைக்கப்படுவதை ஏற்க முடியாது.

தொடர்புக்கு: **99520 23935**



- அ.பாஸ்கர்

# போராட்டம் வெல்லும்

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டம் 2005 செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஊரக பகுதிகளில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் உள்பட உடல் உழைப்புத் தொழிலாளர் குடும்பங்கள் ஆண்டுக்கு 100 நாள் வேலை பெறுவதை சட்டபூர்வ உரிமையாக்கும் வேலை உறுதியளிப்புச் சட்டம் உலக நாடுகளால் பாராட்டி, வரவேற்கப்பட்டது.**

இது இடதுசாரி கட்சிகளின் ஆதரவு பெற்ற, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் ஆட்சி காலத்தில் (2004 – 2009) உருவான குறைந்தபட்ச பொது வேலை திட்டதில் அளித்த உறுதிமொழிப் படி நிறைவேற்றப்பட்ட சட்டமாகும். இது ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கும் முன்னோடி சட்டமாகும்.

வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் வேலை உறுதியளிப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்புத் தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லாத, தொழிலாளர் குடும்பங்களுக்கு, அதாவது பகலில் வேலை செய்து, கிடைக்கும் ஊதியத்தில் அன்றாடம் பொங்கிச் சாப்பிடும் அடித்தட்டு உழைக்கும் மக்கள் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 100 நாள் வேலை வழங்கும் கடமைப் பொறுப்பு ஊராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சட்டம் நிறைவேற்றி, அமலாக்கத் தொடங்கி 16 ஆண்டுகள் முடிந்த பின்பு, திட்டத்தில் வேலை அட்டை பெற்றுள்ள தொழிலாளர் குடும்பங்களுக்கு 100 நாள் வேலை வழங்குவதில் ஒன்றிய அரசு இதுவரை வெற்றிபெறவில்லை. சராசரி கணக்கீடும் ஆண்டுக்கு 55, 60 நாட்களை தாண்டவில்லை. இந்த நிலையில் 2014 ஆம் ஆண்டில் ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தப்பட்டுள்ள பாஜக ஒன்றிய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை சீர்குலைத்து, சிதைத்து, அழித்தொழிக்கும் திசை வழியில் செயல்பட்டு வருகிறது.

பாஜக – ஆர் எஸ் எஸ் ஒன்றிய அரசின் விவசாயத் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து, இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் நாடு முழுவதும் தொடர்ந்து போராடி வருகிறது. இதில் இணைந்து செயல்படும் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் விவசாயத் தொழிலாளர் நலனை பாதுகாக்கும் கோரிக்கைகளை முன் வைத்து தொடர்ந்து போராடி வருகிறது.

கடந்த 2017 ஜனவரி மாதத்தில் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்பட்டது. வேலையின்மையும், வருமான இழப்பும் விவசாயத் தொழிலாளர் வாழ்வை வேரோடு பிடுங்கி எறியப்பட்ட செடிகள் போல் வீதியில் எறிந்துள்ளது.

இவர்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையில் பட்டினி இல்லாமல் வாழ்ந்திட ரொக்கப் பண உதவியும், வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை செய்த நாட்களுக்கு கொடுக்க வேண்டிய ஊதியப் பாக்கியினையும் உடனடியாக வழங்க வேண்டும் என்பது கோரிக்கை முழக்கமாக இருந்தது.

தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் நாற்காலிக்கு " இசை நாற்காலி " போட்டியும், கூவாத்தூர் கூத்தும் நடந்து கொண்டிருந்தது. தமிழ்நாடு அரசை வழிநடத்திய ஆர்எஸ்எஸ் – பாஜக ஒன்றிய அரசின் பொறியில் சிக்கிய " எலிகளாக" உயிர்பிழைக்கும் முயற்சியில் " அடிமை சாசனம்" எழுதிக் கொடுத்து, குனிந்து நின்று. கும்பிட்டு கிடந்தது.

இந்தச் சூழலில் திருத்துறைப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு வாழ்வாதரக் கோரிக்கைகள் மீது போராடிய விவசாயத் தொழிலாளர் இயக்க முன்னோடித் தலைவர்கள் கே. உலகநாதன் முன் எம் எல் ஏ. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் அ. பாஸ்கர், பி.வி சந்திரராமன், சி. உலகநாதன், பி. காமராஜ், எம். மகாலிங்கம், அ மூர்த்தி, கே. விஜயா, தமிழ்ச்செல்வி ராஜா ஆகியோர் காவல் துறை அனுமதியில்லாமல் போராட்டம் நடத்தியதாகவும் காவல்துறை கலைந்து போக சொல்லியும் கலையாமல் நின்றதாகவும், கைது செய்ய போனபோது தப்பித்து ஓடிவிட்டதாகவும், பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து. நீதிமன்றத்தில் நிறுத்தியது காவல்துறை .

இந்த வழக்கின் விசாரணை திருவாரூர் சிறப்பு நீதித்துறை நடுவர் மன்றத்தில் கடந்த 11.08. 2022 ஆம் தேதி நடைபெற்றது.

**வேலையும், உணவும் கேட்ட, உயிர் வாழ வழியும் நியாயம் கேட்டவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டனர். இவர்கள் தப்பிக்க விடக்கூடாத குற்றவாளிகள் என சாட்சி கூறவும் சில "புண்ணியவான்கள்" வந்திருந்தனர்.**

குற்றவாளிகளுக்கு (?!) தண்டனை பெற்றுத் தருவதில் முனைப்புக்காட்டிய காவல்துறை, நீதிபதிக்கு நேர் விரைப்பாக வணங்கி நின்றனர்.

சட்ட நிபுணர்களின் வழக்காடல் தொடங்கியது. மாண்பமை நீதிபதி காவல்துறைப் பார்த்து " இவர்கள் | குற்றவாளிகள்) செய்த குற்றம் என்ன? என கேட்க காவல் துறை உதவி ஆய்வாளர் "மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்பு திட்டத்தில் சம்பளம் கிடைக்கவில்லை என்பதற்காக போராட்டம் நடத்தினார்கள்" என தெரிவித்தார்.

"நூறு நாள் வேலை செய்தவர்களுக்கு, அரசு கொடுக்க வேண்டிய ஊதியப் பாக்கியை கேட்டது தவறா? இந்தத் தவறுக்கு எந்த சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும்?" என அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பியபடி, காவல்துறையைப் பார்த்து " நமக்கு யார் முதலாளி தெரியுமா?" என வினவினார்.

சற்றும் தாமதிக்காத காவல் அதிகாரி " அரசுதான் நமக்கு முதலாளி, ஐயா" என பதிலளித்தார்.

இதனைக் கேட்ட நீதிபதி, " என்ன. அரசிலமைப்புச் சட்டத்தை சரியாக படிக்கவில்லையா? " நமக்கெல்லாம் எஜமான்கள், முதலாளிகள் மக்கள்தான். அவர்கள் வழங்கும் வரிப்பணத்தில் தான் நாம் ஊதியம் வாங்குகிறோம் " என நீதிமன்றத்தில் தெரிவித்த செய்தி. பல மாதங்களாக நீதிமன்றத்திற்கு நடந்து, நடந்து கால் மடிந்து நின்றவர்களுக்கு, வாய்தா வாய்தா என இழுத்தடித்து காலத்தை நீடிக்க செய்து சோர்வடையச் செய்யும் சவாலை முறியடித்து, குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்த சங்க முன்னோடி ஊழியர்கள் ஊக்கம் பெற்றனர். நியாயத்திற்கு போராடிய பெருமை பெற்றனர்.

நீதி நிலைத்து வாழ்கிறது என்ற நம்பிக்கையோடு அடுத்த வாய்தா நாளை அறிந்து ஊர் திரும்பினர்.

நமது போராட்டம் வெல்லும் ஏனெனில் நாம் வாழ்வதற்காக போராடுகிறோம்.....

தொடர்புக்கு: **94884 88339**



# தோழர் ஜீவா: வர்க்கப் போரா

-சரவணன் வீரைய்யா

**உலகமயமாக்கலின் பிந்தைய இந்திய சமூகம் குறிப்பான வகையில் எல்லா மட்டங்களிலும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்திய சமூக அரசியல் வரலாற்றை மூன்று கட்டங்களில் நின்று பகுப்பாய்வு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த மூன்று கட்டங்களை பின்வருமாறு பிரித்துக் கொள்ளலாம்.**

- விடுதலைக்கு முந்தைய காலனிய சமூகம்,
- விடுதலைக்கு பின் உலகமயமாக்கலுக்கு முன்பான இந்திய சமூகம்,
- உலகமயமாக்கலுக்கு பிந்தைய இந்திய சமூகம்.

இவற்றில், மூன்றாவதாகவுள்ள காலத்தின் நான்காவது பத்தாண்டில் நாம் இருக்கின்றோம். இக்காலத்தின் முதல் மூன்று பத்தாண்டுகளை முதலாளிய சமூகத்தின் நெருக்கடியானது அதனை மீட்டெடுக்கும் வகையில் அதற்கு தேவையான பல்வேறு வகையான கட்டமைப்பு மாற்றங்களைச் செய்து வந்திருக்கிறது. குறிப்பாக, முந்தைய நேரு ஸ்ரீ இந்திராகாந்தி முன்னெடுத்த அரச சோசலிச முன்னெடுப்புகளைத் தகர்த்து, தனியார்மய, தாராளமய மற்றும் உலகமயமாக்கல் கொள்கைகளை உலகவங்கி, பன்னாட்டு நிதியம் ஆகியவற்றின் உதவியோடு கொள்கையளவிலான முடிவை அமலாக்கியது.

மோடியின் முதல் ஐந்தாண்டு ஆட்சியில் முதலாளிய நிதி நெருக்கடியிலிருந்து தப்பிக்க வங்கிக்கு வெளியே சுற்றும் நிதி மூலதனத்தை வங்கிக்குள் கொண்டு வரும் விதமாக அனைவருக்கும் வங்கியோடு இணைப்பை உருவாக்கியது. பணமதிப்பிழப்பு, சரக்கு மற்றும் சேவை (ஜி.எஸ்.டி.) வரி விதிப்பு போன்ற நடவடிக்கையை மேற் கொண்டு சிறு குறு வணிகத்தையும், அதனை நம்பிப் பிழைத்த தொழி லாளர்களையும் நடுத்தெருவில் நிறுத்தியது.

பிறகான இரண்டாம் முறை ஆட்சிபொறுப்பேற்றதுவக்கத் திலிருந்தே, மூன்று வேளாண் சட்டங்கள், தொழிலாளர் சட்ட தொகுப்புகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதின் மூலமாக முதலாளிய நெருக்கடி கோருகின்ற மாற்றத்தை அதாவது, அதிகமான கிராமப்புற மக்களை அவர்களின் வேளாண் உற்பத்தி முறையிலிருந்து வெளியேற்றுவதும், அதே நேரத்தில், தொழிற்சாலைகளுக்கு குறைந்த கூலியில் எந்தவிதமான நிபந்தனையுமின்றி உழைப்பு சக்திகளாக மக்கள் சக்திகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதபடுத்த ஆரம்பித்துள்ளது.

இந்த நெருக்கடியை உருவாக்கும் முதலாளிய சுரண்டல் முரண்பாட்டைத் திசை திருப்பும் விதமாகப் பண்பாட்டு அடையாள அரசியலை முன்னெடுக்கும் வேலைகளில், மக்களை மழுங்கடிக்கும் அரசியலை ஆளும் வர்க்கம் கையிலெடுக்கிறது.

இப்படியான சமூக சூழலில், தனது வாழ்நாள் முழுவதும் தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குரலாக ஒலித்த தோழர். ஜீவாவின் அரசியல் சிந்தனைகளையும், போராட்ட வாழ்வையும் நமது சிந்தனையில் ஏந்துவது இருளில் ஒளியூட்டுவதாக அமையும்.

**ஜீவாவின் பொருள்முதல்வாத பார்வை**

மார்க்சியத்தின் அடிப்படையான பொருள்முதல்வாத பார்வையை ஜீவா தன்னகத்தே கொண்டு இந்தச் சமூகத் தோடு ஊடாடினார்.

ஜீவா பெரியாரோடு சேர்ந்து சுயமரியாதை சமதர்ம கட்சி யைத் தோற்றுவித்த போதும், கருத்தியல் முரண் கொண்டு பெரியாரிடம் இருந்து விலகுகிறார். இங்கு கருத்தியல் முரணாக சமூகம் குறித்த பொருள்முதல்வாத பார்வை முன் வருகிறது. பெரியாரின் பகுத்தறிவு நாத்திகத்திலிருந்து மாறுபட்டு பொருள்முதல்வாத நாத்திகத்தை ஜீவா முன் வைக்கிறார்.

பெரியார் சமூகத்தில் மக்களிடையே நிலவி வந்த பிற்போக்கு மத, கடவுள் நம்பிக்கைகளைச் சாடினார். மாறாக ஜீவா, மத கடவுள் நம்பிக்கைகள் மக்களிடம் நிலவுவதற்கான சமூக பொருளாதார காரணிகளை ஆய்வுக்குட்படுத்துகிறார்.

அதனடிப்படையில், சமூக உற்பத்தி முறையே மக்களின் துன்ப துயர வாழ்வுக்கு அடிப்படை. இந்த நெருக்கடியான வாழ்விலிருந்து விடிவைப் பெற இயலாத மனிதர்கள் மதத்தில் தஞ்சம் புகுகின்றனர் என்று மார்க்ஸ் எங்கெல்ஸ், லெனின் வகுத்த கோட்பாட்டில் நின்று தன்னை நாத்திக கம்யூனிஸ்ட் என்று காட்டுகிறார்.

**“எல்லாவிதமான அடக்கல் - ஒடுக்கல் அடிமைத் தனங்களையும், சுரண்டல் சூறையாட்டங்களையும் இந்தப் பூமண்டலத்திலிருந்து துடைத்து எறிந்துவிட்டு மனிதனுடைய சிறந்த இன்பத்திற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பௌதீகச் சூழ்நிலைகளையும், சாத னங்களையும் படைக்கவே நான் போராடுகிறேன். மனிதத் தன்மையின் மாண்புகளைக் காலடியில் தள்ளி மிதித்துத் துவைக்கும் எல்லா பிற்போக்குத் தீமை களுக்கும் எதிரிடையான இந்த அறப்போரில் எனது பொருள்முதல்வாதமும் எனது நாத்திகவாதமும் எனக்கு மாபெரும் சக்தியையும் உணர்ச்சிப் பெருக்கையும் ஊட்டு கின்றன”.**

மக்கள் மதம் மற்றும் பிற்போக்கு நடவடிக்கைகளிலிருந்து வெளிவர வேண்டுமெனில் இந்தச் சமூக உற்பத்தி



முறையானது அடியோடு தூக்கியெறிப்பட வேண்டும், அதற்கான திட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் பணி செய்ய, கடவுள் நம்பிக்கையுள்ள வெகுசன மக்களும் உறுப்பினராக இருக்க முடியும் என்கிற அளவில் பொருள்முதல்வாத பார்வை கொண்டு ஜீவா இயங்குகிறார். பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட தோழர். பகத்சிங்கின் ‘நான் ஏன் நாத்திகன்?’ நூலை தமிழுக்கு மொழியாக்கம் செய்தார்.

மேலும், பெரியார் மீதான விமர்சனமாக ‘ஈரோட்டுப் பாதை சரியா?’ என்கிற நூலினை ஜீவா எழுதினார். இப்படியாக, அன்றைக்குப் பண்பாட்டு தளத்தில் வேலை செய்த, பிரச்சாரத்தின் மூலமாக சமூக சீர்திருத்தவாத செயல்பாட்டை, பொருள்முதல்வாத அடிப்படையில் நின்று, விமர்சனத்தை அரசியல் தளத்தில் முதன்மையாக ஜீவா செய்தார்.

**அடையாள அரசியலுக்கு எதிரான ஜீவா**

திராவிட அரசியலுக்கு எதிராக சிம்ம சொப்பனமாக விளங்கியஜீவா, அவரின்வர்க்கசிந்தனை அரசியலில்இருந்து தொடர்ச்சியாக திராவிட இயக்க முன்னெடுப்புகளான



# ஆட்டுக்கு தாடி தேவையில்லை



- சி.பாஸ்கர்

**ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு கவர்னர் பதவியும் தேவையில்லை என்று அரை நூற்றாண்டுக்கு முன்னரே அண்ணா குறிப்பிட்டார். அதனை தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி, பாண்டிச்சேரி முன்னாள் கவர்னர் கிரண்பேடி, டெல்லி கவர்னர் ஆகியோர் நிரூபித்து வருகின்றனர்.**

கவர்னர் பதவியையும், அரசியல் சாசனப் பிரிவு 356 ஐயும் பயன்படுத்தி இந்தியாவில் ஜனநாயகப் படு கொலை எல்லையின்றி கட்டவிழ்த்து விடப்பட்டது. காங் கிரஸ், ஜனதா, பா.ஜ.க. என எல்லா கட்சிகளும் இந்த அநியாயத்தை அரங்கேற்றின.

அதிலும் நரேந்திரமோடி – அமித்ஷா கூட்டணி இந்திய ஜனநாயகத்தை படுகுழியின் விளிம்பில் நிறுத் தியுள்ளார்கள். அவர்களுக்கு கவர்னர் பதவி கைத்தடியாக பயன்படுகிறது. ஒரு காலத்தில் வயதான அரசியல் தலைவர்களை கவர்னராக நியமித்தனர். தற்போது ஐபிஎஸ் அதிகாரிகளை நியமிக்கிறார்கள். ராஜ்பவன் அதற்குரிய மரியாதையை இழந்து போலீஸ் ஸ்டேஷன் என்ற நிலைக்கு தாழ்ந்து போய் விமர்சனத்திற்கு ஆளாகி கிரிசல் கெட்டு கிடைக்கிறது.

பாண்டிச்சேரியில் முதல் அமைச்சர் நாராயணசாமி – இதர அமைச்சர்கள் – உயர் அதிகாரிகள் முன்னிலையில் அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. அன்பழகனுக்கும் – கவர்னர் கிரண்பேடிக்கும் மேடையிலேயே நடைபெற்ற கேவலமான குழாயடி சண்டையைப் பார்த்து நாடே சிரிப்பாய் சிரித்தது. ரோஷமும் – சுயமரியாதையும் இருந்திருந்தால் தன் பதவியை அக்கணமே ராஜினாமா செய்திருக்க வேண்டும். அவமானப்பட்டு தலைகுனிந்தது தான் மிச்சம்.

அதே வழியை தமிழ்நாடு கவர்னர் கடைபிடிக்கிறார். தனது அரசியல் சாசன எல்லையில் நியாயமாக நின்று செயல்பட இவர் தயாராக இல்லை. தமிழ்நாடு அவருக்கு உரிய பாடத்தைக் கற்றுத் தரும். தேனீர் விருந்து புறக் கணிப்பு – விழா புறக்கணிப்பு போன்ற நடவடிக்கை வேலை செய்வதாகத் தெரியவில்லை. ஜெயலலிதா பார்முலா – அதிரடி நடவடிக்கை இவைதான் வேலை செய்யும் போலத் தெரிகிறது. கவர்னர் சென்னாரெட்டி – முதல்வர் ஜெயலலிதா உச்சகட்ட மோதல் இந்திய அரசியலில் நடக்கக்கூடாததுதான். ஆனால், அதற்குப்பிறகுதான் கவர்னர் துண்டைக் காணோம்; துணியைக் காணோம் என்று அவமானப்பட்டு தமிழ் நாட்டை விட்டு வெளியேறினார்.

அதிரடிக்கு பெயர்போன தேர்தல் ஆணையர் டி.என். சேஷன், அக்கப்போர் அரசியல் மன்னன் சுப்பிரமணியசாமி எல்லாம் ஜெயலலிதாவிடம் என்ன பாடுபட்டார்கள் என்று நாடு அறியும். அவரவர் மொழியில் பேசினால்தான் அவர் களுக்கு புரியும் என்று ஒருமுறை கலைஞர் சொன்னார். இந்த கவர்னர் ஜெயலலிதா பார்முலாவை அதிகம் விரும்பு வதுபோலத்தான் தெரிகிறது.

திண்டிவனம் முக்கியப் பாதையில் கவர்னர் சென்னா ரெட்டி கான்வாய் அ.தி.மு..க கட்சிக்காரர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. கவர்னர் வாகனத்தின் மீது அழுகிய முட்டை– தக்காளி – கற்களால் தாக்கப்பட்டது. பெண்கள் எவ்வளவு அசிங்கமான மொழியில் பேச முடியுமோ அப்படி பேசினார்கள். காவல்துறை அமைதியாக கைகட்டி வேடிக்கை பார்த்தது. கடைசியாக கவர்னர் கார் அனுப்பப்பட்டது.

டி.என்.சேஷன் நான் தமிழ்நாடு போலீஸை நம்பி வரத் தயார் இல்லை என்றார். சுப்பிரமணிய சாமியை மகளிர் அணி சாக்கடை மொழியில் திட்டினார்கள். மாறுவேடம் போட்டுக் கொண்டு டில்லிக்கு ஓடினார். அதனால் ஜெயலலிதா தன் அதிரடி அரசியலை கடைசிவரை மாற்றிக்கொள்ளவில்லை. அதன் பிறகு வந்த கவர்னர்கள் அவரிடம் பெட்டிப் பாம்பாய்தான் குப்பை கொட்டினார்கள்.

அலுவலக மற்றும் அரசுப் பணி நிமித்தமாக சிங்கப்பூர் செல்ல முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு டெல்லி கவர்னர் அனுமதி தர மறுக்கிறார். இந்த அதிகாரத்தை கவர்னருக்கு யார் கொடுத்தது. மாநில சுயாட்சி மற்றும் கவர்னர் பதவி ஒழிப்பு காலத்தின் கட்டாயம் ஆகிவிட்டது. தவறினால் தேசத்தின் ஐக்கியத்திற்கு சோதனைதான்.

**மத்தியில் ஆளும் இந்த அராஜக ஆட்சியை விவசாயிகள் போராட்டம் போல, இலங்கை மக்கள் போராட்டம் போலத்தான் அப்புறப்படுத்த முடியும். மாநிலங்களிலும், மத்தியிலும் பெரும்**

# ட்டத்தின் போர்க்குரல்!

சாதி ஒழிப்பில், மொழிப் போராட்டங்களில் அடையாள போராட்டங்களை விமர்சிக்கிறார். மொழிப் பிரச்சனையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானத்தை விளக்கி அதன் வழியில் நின்று இவ்வாறாகப் பேசுகிறார்.

"இன்று நமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது, அந்நியர் ஆதிக்கம் அகன்று விட்டது. தமிழ் ராஜ்யம் பெற்றுள்ள நாம், தமிழே எல்லாத் துறைகளிலும் வீற்றிருக்க வேண்டும் என்று அரசு விரும்புவது இயல்பே. வேறு எந்தப் பிரச்னையில் நம்மிடையே கருத்து வேற்றுமை இருந்தாலும் இந்தப் பிரச்னையில் கருத்து வேற்றுமை இருக்க இடமில்லை. சட்ட சபையில் தமிழ் மொழி ஆட்சி செலுத்த வேண்டும். சர்க்கார் காரியாலயங்களில் அவை ராஜ்ய சர்க்கார் காரியாலயமாயினும் சரி, மாவட்ட, வட்ட ஸ்தல அரசாங்க அலுவலகங்களாயினும் சரி எங்கும் தமிழே ஆட்சி செலுத்த வேண்டும். கல்லூரிகளில் தமிழ்! விஞ்ஞானத்தில் தமிழ்! தொழில்நுட்பத்தில் தமிழ்! உயர்நீதி மன்றம் முதல் சகல நீதிமன்றங்களிலும் தமிழ்!

இவ்வாறு தமிழகமெங்கும் தமிழ் மொழி தனியரசு ஒச்ச வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி இத்தனை கோரிக்கைகளோடு மட்டும் நிற்கவில்லை. இந்தியப் பாராளுமன்றத்தில் தமிழகப் பிரதிநிதிகள் தமிழில் பேசவும், சகல தஸ்தாவேஜுகளும் தமிழர்களுக்கு தமிழில் கிடைக்க உத்தரவாதம் வேண்டும். சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகளெல்லாம் தமிழனுக்கு தமிழில் கிடைக்க உத்தரவாதம் வேண்டும். அதுமட்டுமல்ல, தமிழ் நாட்டிலிருக்கும் மத்திய அரசாங்கத்தின் பல்வேறு துறை கிளைகள், தமிழ் மக்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்."

மொழி ஒரு உற்பத்திக் கருவி என்ற அடிப்படையில் மேற்கண்டவாறு பிரதேசவாரியாக சமூக உற்பத்தியில் ஈடுபடுகின்ற உழைக்கும் மக்களின் உற்பத்தி பங்கெடுப்பிற்கு வழியாக முன் வைக்கிறார்.

திராவிட இயக்கத்தினரின் இந்தி எதிர்ப்பு என்ற அடையாள அரசியலை விமர்சிக்கின்றார். திராவிட இயக்கத்தினர் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் ஆட்சி அதிகாரத்திலிருந்தும் மேற்கண்ட நிலையை உருவாக்குவதில் இன்னும் முழுமையடையவில்லை.

ஆனால், அதற்கு மாறாக, இன்றும் உற்பத்தியில் ஈடுபட்டு பொருள் ஈட்டும் வகையில், முன்னேறிய வர்க்கத்திற்கு ஆங்கில வழிக் கல்வியை ஊக்குவித்துவிட்டு மறுபக்கம் மொழிவழி அடையாள அரசியலை முன் வைக்கின்றனர்.

ஜாதி ஒழிப்பு போராட்டத்தில் கம்யூனிஸ்ட்களின் பங்கு குறித்தும், அதன் நடைமுறையில் வர்க்கப் போராட்டத்திற்குள் ஜாதி ஒழிப்பு போராட்டமும் அடங்கும் என்றும், கம்யூனிஸ்ட் தலைவர்களில் தமிழகத்தில் அன்றைக்கு இருந்தவர்களில் பெரும்பாலானோர் சாதி மறுப்பு திருமணம் புரிந்தவர்கள். மேலும், எண்ணற்ற சாதி மறுப்பு திருமணங்களை முன் இருந்து செய்து வைத்துள்ளனர் என்றும், கம்யூனிஸ்ட்டுகளின் தீவிரமான சாதி ஒழிப்பு போராட்டங்களை முன்வைத்துவிட்டு, அனைத்து சாதியினரும் இணைந்து ஜாதி ஒழிப்பு நடவடிக்கையில் இறங்குவது மட்டுமல்ல அரசாங்கத்தைச் சட்டமியற்றும் பணியைச் செய்ய வேண்டும் என்கிறார்.

மாறாக, குடுமி அறுப்பு, பூணூல் அறுப்பு போன்ற திராவிட இயக்க போராட்ட வடிவங்கள் சாதிய அமைப்பை வலுப்படுத்தவே செய்யும் என்று திராவிட இயக்கத்தின் செயல்பாடுகளை ஜீவா விமர்சிக்கிறார்.

சாதிய அடையாள அரசியலை தொண்ணூறுக்கு பிந்தைய உலகமயமாக்கல் சமூக பொருளாதார அமைப்பின் தாக்கம், அரசியலிலும் பிரதிபலிக்கத் துவங்கியது. அதன் வர்க்கப் பிரிவினை அரசியல் ஒரு போதும் சாதியை ஒழிக்க செய்யாது என ஜீவா அன்றைய திராவிட இயக்க ஜாதி ஒழிப்பு அரசியலை விமர்சிப்பதின் மூலம் முன் வைக்கிறார்.

**தொழிலாளி வர்க்க பண்பாட்டில் ஜீவா**

தமிழகத்தில் ஜீவா அவர்கள் இலக்கிய ஆசான், எளிமையானவர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டு இருக்கிறார். ஆய்வாளர்களில் சிலர் தங்களின் அரசியலில் இருந்து அவரை பண்பாட்டு அரசியலை முன்னெடுத்தவர் என்றும் மண்ணுக்கேற்ற மார்க்சியம் பேசியவர் என்றும் சுருக்குகின்றனர்.

வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்தும், சோசலிச லட்சியத்தை அடைவது நோக்கியும் தீவிரமாக அரசியல் தளத்தில் முதன்மையாக செயற்பட்டவர் தோழர் ஜீவா.

தோழர் பி. இராமமூர்த்தி இவ்வாறாக ஜீவா குறித்து கூறுகிறார்.

"1932 ல் வட இந்தியாவிலிருந்து அமீர் ஹைதர்கான் சென்னைக்கு வந்து கம்யூனிஸ்டுக்கு ஆள் தேடும் மோப்ப முயற்சியில் ஈடுபட்டார். கம்யூனிஸ்ட் கட்சிக்கு எத்தகைய பண்பு தேவையோ, அத்தகைய பண்பு பெற்றவர் ஜீவா என்பதை அவர் உணர்ந்தார். ஜீவாவை கம்யூனிஸ்ட் ஆக்கினார். அந்த ஜீவா தான் என்னை கம்யூனிஸ்ட் ஆக்கினார். தமிழ்நாட்டில் சோசலிசத்தைப் பற்றி இன்றைய தலைவர்கள் யாருமே இன்றைய கட்சிகள் பேசாத காலத்தில் ஜீவாதான் பேசினார்; பாடுபட்டார். சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் நடைபெற்ற தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களுக்கு அவர் தான் தலைமை தாங்கினார். உத்வேகமூட்டினார்."

1938ல் மதுரை பசுமலை மில் தொழிலாளர் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைஞ் 1940ல் சென்னை மாகாணத்தை விட்டு வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. கரைக்காலில் தஞ்சம் புகுகிறார். அங்கும் நுழைய தடை விதிக்கப்படுகிறது. பிறகு பம்பாய் செல்கிறார். அங்கும் கைது செய்யப்படுகிறார். 1942ல் வேலூர் சிறையிலிருந்து விடுதலையடைகிறார். மீண்டும் சென்னை மாகாணத்தை விட்டு வெளியேற உத்தரவு. சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்கிறார். அங்கும் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறை வைக்கப்படுகிறார்.

இப்படியாகத் தன் வாழ்நாள் முழுவதும் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்த வர்க்கப் போராளி பின்வருமாறு எழுதுகிறார்.

"பொருளாதார அடிமைத்தனம், அரசியல் அடிமைத்தனத்தையும் சமுதாய அவமதிப்பையும், கோடானுகோடி மக்களின் ஆத்மீக, தார்மீக வாழ்வின் கொச்சைப்பாட்டையும் இருட்டடிப்பையும் பல்வேறு உருவங்களில் தவிர்க்க முடியாதபடி பெற்றெடுத்து பாலூட்டி வளர்க்கிறது. பொருளாதார விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான அரசியல் உரிமை கொஞ்ச நஞ்சம் தொழிலாளி விவசாயி மக்களுக்குக் கிடைக்கக்கூடும் . ஆனால்,

**இன்றைய ஏகாதிபத்தியப் பிடிப்பையும், நிலப்பிரபுத்துவ அமைப்பையும் ஏகபோக மூலதனத்தின் ஆதிக்கத்தையும் தூக்கியெறிந்தாலன்றி, வறுமை, வேலை-யின்மை, அடிமைத்தனம் ஆகிய சாபத் தீடுகளுக்குக் கழுவாய் காணமுடியாது".**

"ஏதேச்சாதிகார சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம் ஆகிய சமுதாயங்களில் மனித வர்க்கம் நரக வேதனை அனுபவித்துத் திரட்டிய அறிவுச் செல்வத்தின் இயல்பான வளர்ச்சியின் விளைவாகத்தான் பாட்டாளி வர்க்கப் பண்பாடு உருவாகி நிற்க வேண்டும்" என்று தனது நூலில் குறிப்பிடும் ஜீவா, அப்பண்பாட்டினை தன் வாழ்வில் கடைப்பிடித்தார். பாட்டாளிகளிடமிருந்து வேறுபட்டு இருத்தல் கூடாது என்பதற்காக ஆலைத் தொழிலாளிகள் உடுத்தும் நிஜார் போன்ற உடையையே உடுத்தினார்.

தொழிலாளி வர்க்க அரசியலிலிருந்து அதன் பண்பாட்டை கட்டி எழுப்பவே கலை இலக்கிய பெருமன்ற அமைப்பை உருவாக்கினார். மாறாக, பண்பாட்டு தளத்தில் வேலை செய்ய வேண்டும் எனத் தனியாக கம்யூனிஸ்ட் கட்சிக்கு வெளியே எழுப்பப்படவில்லை. அதனையும் கூட, அவரது மரணத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக தான் உருவாக்கினார்.

மக்சிம் கார்க்கி போன்று பிரதானமாக பண்பாட்டு தளத்தில் வேலை செய்தவர் அல்ல ஜீவா. அவர் அரசியல் தளத்தில், பாட்டாளிகளின் போர்க்குரலாக, வர்க்கப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர். பண்பாட்டுத் தளத்தை வர்க்க அரசியலுக்குள் கொண்டு வந்தவர் ஜீவா.

நிலவுகின்ற இந்திய முதலாளிய வர்க்கத்தின் நெருக்கடியிலிருந்து தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக முன்னகர்த்தி வரும் கொள்கை திட்டங்களை எதிர்கொள்ள ஜீவாவின் பொருள்முதல்வாத பார்வையும், அரசியல் விமர்சன கண்ணோட்டத்தோடு கூடிய வர்க்கப் போராட்ட குணாம்சமும் நமக்கு இன்றைய சூழலில் அவசியத் தேவையாக இருக்கிறது.

தொடர்புக்கு: 94887 52879



**போராட்டங்கள் தான் இந்த சர்க்காரை விரட்டும். நாடாளுமன்றத்திற்குள் நடக்கும் போராட்டம் இந்த அரசை எதுவும் செய்துவிடமுடியாது.**

டெல்லியில் ஜனநாயக மீட்பு மாநாடு நடத்தி – உலகம் முழுவதும் பத்திரிகையாளர்களை திரட்டி ஒன்றிய ஆட்சியின் முகத்திரையை கிழிக்க வேண்டும். இது தவிர்த்து வேறு எந்த வழிமுறையும் இந்த அரசை வீழ்த்த உதவாது. மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம். மதிகெட்ட ஒன்றிய அரசை வீழ்த்துவோம். அதிகார போதை தலைக்கேறிய குரங்கு மரத்தின் உச்சாணிக் கொம்பில் சர்க்கஸ் செய்கிறது. பட்டுக்கோட்டையின் வார்த்தையில் சொன்னால் கொம்பு முறிந்த விழுந்து குரங்கு சாகும் காலம் நெருங்கி வருகிறது. அவசர நிலையைத் தளர்த்தி இந்திராகாந்தி தேர்தல் நடத்தியபோது, எதிர்க்கட்சிகளே பெரிய அளவில் அணிதிரளவில்லை. ஆனால் இந்திராகாந்தி படுதோல்வி அடைந்தார். அதேபோல் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அரசியல் அற்புதம் நிகழும். ஆட்சி மாற்றம் நிகழ்வது உறுதி.

ஹிட்லர் தோற்பான் என்று உலகம் நம்பவில்லை; ஆனால், ஸ்டாலின் நம்பினார்; வெற்றியும் கண்டார். அறம் எப்போதும் நின்றுதான் கொல்லும். தமிழரின் வீரம், விவேகம், அறிவு அனுபவத்திற்கு முன்னால் இந்த ஆட்டம் போடும் கவர்னர் 'சோட்டா ஆத்மி' என்று புலம்பி தலை கவிழும் காலம் விரைந்து வந்து கொண்டு இருக்கிறது. அவர் மாறுதலாகி எங்கு சென்றாலும் மக்கள் திரள் போராட்டத்தை நடத்தி கடிவாளம் போடுவது ஜனநாயகத்திற்கு நல்லது; மாற்றத்திற்கு நல்லது.

தொடர்புக்கு: 96007 23726

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

நூறு நாள் தொடர்ந்து நடந்த போராட்டம் குறித்து, அதுவும் அதிகார மையத்தில் செல்வாக்கு செலுத்தும் பன்னாட்டு நிறுவனத்தின் ஒரு ஆலைக்கு எதிரான போராட்டம் குறித்து தமிழ்நாடு அரசின் உள்துறை நிர்வாகம் ஒரு முறை கூட விவாதிக்கவில்லையா? அப்போது உள்துறை நிர்வாகத்தை தனது பொறுப்பில் வைத்திருந்த முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஒரு முறை கூட ஸ்டெர்லைட் போராட்டம் அல்லது பிரச்சனை குறித்து விவாதிக்கவில்லையா? என்ற வினாக்கள் எழுகின்றன.

மாவட்டத் தலைநகரில் பெரும் மக்கள் எண்ணிக்கை கூடுவது குறித்தும், அது குறிப்பிட்ட கோரிக்கையை வலியுறுத்தி வருவது குறித்தும் உளவுத்துறை அரசுக்கு தகவல் அனுப்பவில்லையா?

ஸ்டெர்லைட் ஆலை இயக்கத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள், உயிர் வாழ்வு ஆபத்துக்கள், சுகாதாரக் கேடுகள் குறித்து சுற்றுச்சூழல்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, உள்ளாட்சி நிர்வாகம் போன்றவை கவனம் செலுத்தியதா, இல்லையா?

ஸ்டெர்லைட் ஆலைக் கழிவுக்கு எதிரான மக்கள் இயக்கத்தை வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சனையாக அணுகியது அரசின் கொள்கை சார்ந்ததா? இல்லை, நிறுவனம் மற்றும் அதிகார வர்க்கத்தின் விருப்பம் சார்ந்ததா?

மே 22, 2018 துப்பாக்கி சூட்டிற்கு மூன்று வட்டாட்சியர்கள் மட்டுமே உத்தரவு வழங்கியதை சட்டமுறைகளுக்கு உட்பட்டதாக ஆணையம் கருதுகிறதா?

சுடலைகண்ணு என்ற காவலர் கண் மூடித்தனமாக மட்டும் அல்ல, மனித உயிர்களை இழந்து வெறி பிடித்தபடி துப்பாக்கி சூடு நடத்தியதை குறிப்பிட்டுள்ள ஆணையம், துப்பாக்கி சூட்டில் ஈடுபட்ட மற்ற காவலர்களின் நடவடிக்கையை எப்படி கருதுகிறது?

கடந்த 2021 மே 14 ஆம் தேதி விசாரணை ஆணையம் வழங்கிய இடைக்கால அறிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசு 21.05.2027 ஆம் தேதி ஸ்டெர்லைட் தொடர்பான வழக்குகளை திரும்பப் பெறுவதாக அறிவித்தது. போராட்டம் காரணமாக கல்வியை தொடர முடியாமல் தடைபட்ட, வேலையிழப்பு ஏற்பட்டவர்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்பை தொடர தடையின்மை சான்றிதழ்கள் வழங்குவதாகவும் அறிவித்தது.

இந்த நிலையில் விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கை துப்பாக்கிச் சூட்டிற்கும் ஆலைநிர்வாகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று, ஆலை நிர்வாகத்திற்கு நற்சான்று கொடுத்திருப்பதாக கூறும் செய்தி அதிர்ச்சியளிப்பதுடன், ஆழமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

துப்பாக்கி சூட்டில் இறந்துபோனவர்கள் குடும்பங்களுக்கு ஆணையம் பரிந்துரைத்துள்ள இழப்பீட்டை விட கூடுதலான தொகையை அரசு நிர்ணயித்து வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களை கட்டறிந்து, அவர்களது மறுவாழ்வை உறுதிப்படுத்த அரசு வேலை வழங்குவது உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு தொடர்பாக உள்துறை தலைவர், தமிழ்நாடு காவல்துறை தலைவர் மற்றும் அப்போதைய அமைச்சரவையின் பங்கு குறித்து பரிசீலிக்க வேண்டும்.

ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் மூலம் தான் மக்களாட்சி கோட்பாட்டை வலுப்படுத்த முடியும் என்பதை கருத்தில் கொண்டு மக்கள் இயக்கங்களை அணுகுவதில் மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கை அணுகுமுறை உருவாக்க வேண்டும்.

ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணைய அறிக்கையை மக்கள் மன்றத்தில் முன்வைத்து பொது விவாதம் நடத்த வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



- காசி விஸ்வநாதன்

# தமிழ் கடல் நெல்லை கண்ணன் மறைவு இடது சாரி இயக்கத்திற்கு பேரிழப்பு...

**தாமிரபரணி பொங்கிப் பிரவாகம் எடுத்து ஓடும் திருநெல்வேலி நகரின் மத்தியில் அமைந்துள்ள நெல்லையப்பர் காந்திமதியம்மன் கோவில் அருகில் உள்ள சன்னதி தெருவில் கம்பீரமாய் உயர்ந்து நிற்கின்ற பெரிய பங்களா போன்ற வீடுஞ் பழமை மாறாத கலாச்சாரம் பிரதிபலிக்கும். வீட்டிற்குள் நுழைந்தால் இரண்டு நாய்கள் வாலை ஆட்டும். அருகில் உள்ள படிக்கட்டில் ஏறி மாடிக்குச் சென்றால் வண்ண வண்ண பறவைகள் ஏராளம் கீச் கீச் என ரீங்காரமிட்டுக் வரவேற்கும்.**

வீட்டின் ஹாலிலோ அல்லது மாடியின் மெயின் ஹாலிலோ கம்பீரமாக அமர்ந்து நம்மை வரவேற்பார். அவர்தான் தமிழ் கடல் நெல்லை கண்ணன். புன்னகைக்கும் முகம். தான் சிரிக்காமல் மற்றவர்களை சிரிக்க வைக்கின்ற பாங்கும் நம்மை மயக்கும்.

அவருடைய இல்லத்திற்கு செல்லுகின்ற பொழுதெல்லாம் புதிய புதிய விஷயங்களை கற்றுக் கொண்டே இருக்கலாம். அண்ணன் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். மேடையில் மட்டுமல்ல தனிமையில் பேசி கொண்டிருக்கும் போது கூட கவிதைகளும், பழம் பெரும் அரசியல் சம்பவங்களும், அனுபவம் நிறைந்த விஷயங்களும் அருவியாகக் கொட்டிக் கொண்டே இருக்கும். பத்து நிமிடத்தில் 15 தடவை சிரிக்க வைக்கக்கூடிய ஆற்றல் அவருடைய பேச்சுக்கு மட்டுமே உண்டு. பத்து நாட்களுக்கு முன்னால் தான் நேரில் சென்று அவரை சந்தித்து திரும்பி யிருந்தோம்.

18.8.2022 மதியம் 1.40 மணி அளவில் நெல்லை கண்ணன் மறைந்துவிட்டார் என்ற செய்தி நம்மை நிலை குலையச் செய்துவிட்டது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத் தோடு மிக நெருக்கமான தொடர்பு உடையவர். மேடைகளில் பகிரங்கமாகவே தான் பேசக் கற்றுக் கொண்டது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் வி. எஸ். காந்தி மற்றும் மூத்த தலைவர் தோழர் தா. பாண்டியன் அவர்களாலும் தான் என்று பல மேடைகளில் பகிரங்கமாக கூறியவர்.

ஜீவாவின் வழியில் கம்பனையும் பாரதியையும் மக்களுக்கு கொண்டு சென்றவர். அவரிடம் பேசும்பொழுது சொன்னார் “ கலை இலக்கியத்தில் ஜீவா, நா. வானமாமலை, ரகுநாதன் ஆகியோர்தான் எனக்கு வழிகாட்டி. நச்சு இலக்கியங்களுக்கு எதிராக கருத்தியல் போராட்டம் நடத்துவதற்கும், பெண்ணடிமைத்தனத்தை எதிர்ப்பதற்கும் கலை இலக்கிய பெருமன்றம் தான் வழிகாட்டி. ரகுநாதனிடமிருந்துதான் புதுமைப் பித்தனை அறிந்துகொண்டேன். ஜீவா காட்டிய வழியில் நின்று பாரதியையும், கம்பனையும் எவ்வாறு மக்களிடம் கொண்டு செல்வது என்பதையும் அறிந்து கொண்டேன். என்.எம். கிருஷ்ணன், முல்லை நெல்லையப்பன், வானம்பாடி சங்கர், எல்லாவற்றுக்கும் மேலாக தி.ச. நாராயணன் ஆகியோருடைய உறவு என்னை வளர்த்தது. அனேகமாக 1976 வது வருடம் என்று ஞாபகம்ஞ் பேட்டை தாயம்மாள் நடுநிலைப்பள்ளியில் கலை இலக்கிய பெருமன்ற கூட்டம் நடந்தது. நானும் கலந்து கொண்டேன். தேரடித் திடல்ல முப்பெரும் விழா நடந்தது. சி.எஸ். மணி, கிரகோரி, வலசை பாண்டியன் போன்ற பெரியவர்கள் எல்லாம் கலந்துகொண்டார்கள். செந்தீ ஒரு புறத்திலும், மறுபுறத்தில் நானும் பட்டிமன்றம் நடந்தது. பெரிய மோதலே வந்துருச்சு.. அடுத்த வருஷம் காளிமுத்துவும் வந்தாரு. அவரும் நல்ல பேச்சாளர். அவரும் நானும் பேசினோம். பத்திரிகை நடத்தினோம். அதுல வந்த ஒரு கவிதை இப்போதும் நினைவில் இருக்குஞ்

தண்ணியில் கிடந்தாலும் வேகம் குறையாத சிவப்பு பாஸ்பரஸ் நாங்கள்...

இந்த ஊரைச் சுற்றி எல்லா இடத்திலும் கலை இலக்கியப் பெருமன்றத்தின் கிளைகளைக் கொண்டு போனோம். குன்றக்குடி அடிகளார் தலைமையில் ஊரு ஊரா பட்டிமன்றம் போடுறதுக்கு பெரிய வாய்ப்பு கிடைச்சது. இந்தியாவுக்கு நல்வாழ்வு தர இருப்பது காந்தியமா? மார்க்சியமா? என்பது தான் தலைப்புஞ் பல ஊர்களில் இந்த பட்டிமன்றத்தைப் போட்டு இருக்கோம். பெரிய சாமின்னு நான் அழைக்கிற குன்றக்குடி அடிகளார் அவர்கள்தான் நடுவர்.. நானும், தஞ்சை ராமமூர்த்தியும் காந்தியம் பக்கம் வாதிடுவோம். மார்க்சியத்திற்கு தா.பாண்டியன், கே.சுப்பராயன் பேசுவாங்க... அடிகளார் தீர்ப்பு எப்பவும் மார்க்சியத்திற்காகவே இருக்கும். புதுமைப்பித்தன் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடினோம்” மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்ட அண்ணனை இனிமேல் காண முடியாது.



தன்னுடைய கருத்து எதனையும் மறைக்கத் தெரியாதவர். இதனால்தான் பல நேரங்களில் அவர் அவதிகளுக்கு ஆளாகி உள்ளார். 2019ஆம் ஆண்டு இறுதியில் இந்திய குடியுரிமை சட்ட திருத்த மசோதாவுக்கு எதிராக மேலப்பாளையத்தில் பேசியதற்காக கைது செய்யப்பட்டார். செய்தியறிந்து திகைத்துப் போனோம். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் நேரில் சென்று துணையாக இருந்தோம். மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறினார். திருநெல்வேலி குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லுகின்ற வரை நம் தோழர்கள் துணைநின்று பாதுகாத்தோம். அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்ட பின் சிறைச்சாலை கதைகளை இந்த மகிழ்ச்சியோடு சொல்லிக்கொண்டு இருந்தார்.

நினைவுகள் சுழன்று கொண்டே இருக்கிறது.

1945 ஜனவரி 27ஆம் நாள் நெல்லையில் ந.சு. சுப்பையா பிள்ளை முத்துலட்சுமி தம்பதியருக்கு 8 வது மகனாகப் பிறந்தார். மகாபாரதக் கண்ணன் எட்டாவது பிறந்தது போல தானும் எட்டாவதாக பிறந்ததில் பெருமை கொள்வார்.

தந்தையிடம் தமிழ் கற்றுக் கொண்டார். தந்தையிடம் ஒருமுறை கேட்ட வெண்பாவை உடனடியாக அப்படியே ஒப்பிக்க வேண்டும். இதில் தடுமாற்றம் ஏற்பட்டால் அவருடைய தந்தை அடுத்த வெண்பாவை சொல்லிக் கொடுக்க மாட்டார். தந்தையிடம் கம்பனையும், இளங்கோவையும், பாரதியையும் கற்றுத்தேர்ந்தார். தந்தையின் மீது மிகுந்த பக்தியும் அன்பும் கொண்டவர்.

அவருடைய பேச்சுக்களில் கவிதைகள் அருவியாகக் கொட்டும். ஒருமுறை படித்தால் மறுமுறை நினைவில் நிற்கும் ஆற்றல் அவருக்கு கிடைத்த வரப்பிரசாதம். இளம் வயதிலேயே காங்கிரஸ் பேரியக்கத்தால் ஈர்க்கப்பட்டார். பெருந்தலைவர் காமராஜர் மீது மிகுந்த பக்தியும் மரியாதையும் கொண்டவர். கவிஞர் கண்ணதாசனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். காங்கிரஸ் கட்சியில் இருந்த போது மம்தா பானர்ஜி, நேரு குடும்பத்தாருடன் அரசியல் ரீதியாக நெருங்கிப் பழகிய கதைகளை அவர் வாயால் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் தன்னுடைய பிறந்த நாளின் பொழுது நெருங்கிப் பழகிய அனைவரையும் அழைத்து விருந்தோம்பல் செய்த நிகழ்வுகள் பல ஆண்டுகள் தொடர்ந்து இருந்து வந்தன. அவர் வழங்கிய நெல்லைக்குரிய சொதியின் சுவை நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ளது.

அவரை மதித்தவர்களை அவர் மதித்தார். அரசு செய்யக்கூடிய தவறுகளை தைரியத்தோடு மேடைகளில் சுட்டிக் காட்டவும், நையாண்டி செய்யவும் அவர் தவறியதில்லை. தான் தேர்தலில் நின்றதால் ஏற்பட்ட அனுபவங்களை பலமுறை சுவைபட கூறியுள்ளார்.

நமக்கு நினைவு தெரிந்து முதல்முறையாக அவருடைய உரையைக் கேட்கும் வாய்ப்பு 1974இல் ஏற்பட்டது. இளம் வயது நெல்லை கண்ணன் கருப்பு பேண்டும், வெள்ளைச் சட்டையும் அணிந்து இருப்பார். பேண்ட் போட்ட ஒரு இளைஞன் மேடைகளில் பேசுவது என்பது அந்தக் காலத்தில் அபூர்வம். கேட்போரை கட்டிப்போடும் ஆற்றலோடு பேசுகின்றவரை காங்கிரஸ் கட்சி பொதுக்கூட்டத்தில் தான் முதலில் சந்திக்கின்றோம்.

அப்போது அவரிடம் நேரில் சென்று ஏற்படுத்திக் கொண்ட உறவு அவர் உயிர் பிரியும் வரை தொடர்ந்தது. எட்டயபுரம் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் நடத்துகின்ற பாரதி விழாவில் பல சந்தர்ப்பங்களில் அவர் உரையாற்றியுள்ளார்.

மகாகவி பாரதி பிறந்த மண்ணில் பாரதியின் கவிதைகளுக்கு உயிர் கொடுத்த ஆற்றல் அவருடைய உரையில் உண்டு.

**காங்கிரஸ் கட்சியை நேசித்த அவர் கலை இலக்கியத் துறையில் பேராசிரியர் நா. வானமாமலை, மார்க்சிய அறிஞர் தொ. மு. சி. ரகுநாதன் ஆகியோரோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற அன்றைய நெல்லை மாவட்ட செயலாளர் தி.ச. நாராயணன், நகர செயலாளர் என்.எம். கிருஷ்ணன், வானம்பாடி சங்கர் போன்றோருடன் இணைந்து இலக்கிய ஆளுமை புதுமைப்பித்தன் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்தினார். கருத்து வேறுபாடு உள்ளவர்கள் கூட அவருடைய தமிழ் பேச்சால் கட்டிப்போடப் பட்டனர்.**

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களோடு நெருக்கம் கொண்டு பட்டிமன்றத்திற்கு புதிய வீச்சை உருவாக்கினார். தமிழ் அவர் நாவில் நர்த்தனம் ஆடியது. இடதுசாரி இயக்கங்கள் கூட்டங்களில் பேச அழைத்தால் விருப்பத்தோடு கலந்துகொள்வார். 2021 ஆம் ஆண்டு மத நல்லிணக்க பொங்கல் விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்துத்துவாவை எதிர்ப்பதில் தீவிரம் காட்டினார். ‘நான் இந்துவல்ல’ என பிரகடனப்படுத்தி ‘சைவ மதம்’ என்பதை ஆழமாக வலியுறுத்தினார் . அரசியலில் காங்கிரஸ் சார்பு நிலை பிற்காலத்தில் மாறியது. தான் கம்யூனிஸ்ட்டு என்பதை புதுச்சேரியில் பகிரங்கமாக பிரகடனப்படுத்தினார். நம்முடைய தலைவர்கள் அனைவரையும் பாசத்தோடு நேசித்தார். மூத்த தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்கள் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். நேரில் பார்க்கும் பொழுதெல்லாம் தலைவர்களின் பெயரைச் சொல்லி நலம் விசாரிப்பது அண்ணன் நெல்லை கண்ணனுடைய பழக்கம். இன்றும் காதில் கேட்டுக்கொண்டே இருக்கிறது ‘அண்ணாச்சி நல்லா இருக்காங்களா?’ ஜீவா காமராஜர் நட்பை உலகறியச் செய்த பெருமை நெல்லை கண்ணனுக்கு உண்டு. ஜீவாவை பாமர மக்களின் மனதில் பதியும் அளவிற்கு கொண்டு சென்றார். ஜீவா வழியில் பாரதியையும், கம்பனையும், பண்டைய தமிழ் இலக்கியங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட மகத்தான மாமனிதர். பெரும்பாலும் காரிலேயே தமிழ்நாடு முழுவதும் சுற்றி வந்தார். அவரிடம் விளக்கம் கேட்டபோது ‘அன்பு தொல்லைகளை தவிர்க்க’ என்ற பதிலைச் தந்தார்.

அவருக்கு இரண்டு மகன்கள். சுகா எனப்படும் சுரேஷ் கண்ணன் சிறந்த எழுத்தாளர். திரைப்பட இணை இயக்குனர். ஆறுமுகம் புதிய தலைமுறை தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர்.

‘ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் என கேட்ட தாய்’ என்பதை போல ஒரு தந்தையை தவழும் உள்ளத்தோடு நின்று தன் பிள்ளைகளின் வளர்ச்சியில் பெருமிதம் கொள்ளக் கூடியவர். ஐஎன்டியூசி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தொழிற்சங்க இயக்கத்தின் தலைவராக இருந்தார். தொழிலாளர்களின் நலன் காப்பதில் நல்ல முன்னோடி. திமுக ஆட்சியில் தமிழ் வளர்ச்சித்துறை அவருக்கு இளங்கோவடிகள் விருது கொடுத்த பொழுது மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். தொல். திருமாவளவன் அவர்கள் தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் கட்சி கண்ணனுக்கு காமராஜர் விருது வழங்கி கௌரவித்தது.

மனிதன் !

இந்த வார்த்தை எவ்வளவு கம்பீரமாக இருக்கிறது என்று மாக்சிம் கார்க்கி கூறினார்.

நெல்லைக்கண்ணன் மனிதர் .. மனிதாபிமானத்தோடு வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த அவருக்கு கண்ணீரோடு வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: **94435 27486**

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து என். ஆர் காங்கிரஸ் வெளியேற வேண்டும்

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநில 23 வது மாநாடு அறைகூவல்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநில 23 வது மாநாடு ஆக 17, 18 தேதிகளில் தட்டாஞ்சாவடி தொகுதிகுட்பட்ட ஜீவா ருக்மணி மகாலில் நடைபெற்றது. மாநாடு அரங்கிற்கு தோழர் மிசே என்கிற தேவராசு பெயர்சூட்டப்பட்டது. மறைந்த விடுதலைப் போராட்ட வீரர் காரைக்கால் சிவம் பெயர் நுழைவு வாயிலுக்கு சூட்டப்பட்டது.

மாநாட்டினை ஒட்டி புதுச்சேரி முழவதும் 200க்கும் மேற்பட்ட இடங்களில் சுவர் எழுத்து பிரச்சாரம் செய்யப்பட்டது.

பாரதி, பாரதிதாசன், தமிழ்ஒளி என கவிஞர்கள் அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்ற சமூக சீர்திருத்தவாதிகள் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் என மார்க்சிய மூலவர்கள் ஸ்டாலின், மாசேதுங், ஹோசிமின், சேகுவாரா என உலக தலைவர்கள் காட்டே, பி. சி. ஜோஷி, ராஜேஸ்வரராவ், இந்திரஜித்குப்தா, ஏ.பி.பரதன், குருதாஸ் தாஸ் குப்தா, து. ராஜா என இந்திய தலைவர்கள் ஜீவா,. வ. சுப்பையா, தா.பாண்டியன், ஆர். நல்லக்கண்ணு, இரா. முத்தரசன் என தமிழக புதுச்சேரி தலைவர்கள் உருவங்களுடன் நகரின் முக்கிய சாலை சந்திப்புகளில் வைக்கப்பட்ட விளம்பரத்தட்டிகளும் நகர் முழுவதும் கட்டப்பட்டிருந்த செங்கொடி களும் செந்தோரணங்களும் புதுச்சேரி மக்களை திரும்பி பார்க்க வைத்தன.

ஆக 17 முதல் நாள் மாநாடு கொடி ஏற்றத்துடன் நடைபெற்றது. முன்னதாக கடந்த மாநாடு நடைபெற்ற வில்லியனூரிலிருந்து கொண்டு வரப்பட்ட கொடியினை தேசியக்குழு உறுப்பினர் அ. இராமமூர்த்தி பெற்றுக்கொண்டார்.

குருவிநத்தம் இராமனுஜம் நினைவு ஜோதியை மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் நாரா. கலைநாதனும், பனையடிக்குப்பம் வையாபுரி நினைவு ஜோதியை கட்டுப் பாட்டுக்கு தலைவர் நவீன். தனராமனும் ஜூலை 30 தியாகிகள் நினைவு ஜோதியை மாநில துணை செயலாளர் வி.எஸ்.அபிஷேகமும் விவசாயசங்க தலைவர் காட்டேரிக்குப்பம் வேணுகோபால் நினைவு ஜோதியை மாநில துணை செயலாளர் து. கீதநாதனும், தியாகி சுல்தான் நினைவுஜோதியை வழக்கறிஞர் ரஷீத்தும் பெற்றுக்கொண்டனர்.

மாநாட்டு கொடியினை மூத்த தோழர் முன்னாள் அமைச்சர் ஆர். விசுவநாதன் ஏற்றி வைத்தார்.

பொதுமாநாட்டிற்கு மாநில செயலாளர் அ. மு. சலீம் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் ஆர். விசுவநாதன் கொடி ஏற்றி உரையாற்றினார்.

கட்சியின் மூத்த முன்னோடிகளான எம். கே. இராமன் , அ. கலியபெருமாள், துலாரி கரீம், அரியாங்குப்பம் சுப்பிரமணி, பஞ்சாலை பா.கன்னியப்பன் புதுப்பேட்டை தியாகி. செங் கேணி, பாகூர் கலியமூர்த்தி, பாகூர் ராஜா, கவிஞர் சு. மாயகிருஷ்ணன், எல்லைபிள்ளைச்சாவடி முருகேசன், எல்லப்பிள்ளைச்சாவடி கிருஷ்ண மூர்த்தி, முத்திரையர்பாளையம் ராஜகோபால், சுலைமான், காட்டேரிக்குப்பம் அப்துல்ரஷித் உள்ளிட்டவர்களை அகில இந்திய பொதுச் செய லாளர் து. ராஜா சால்வை அணிவித்து சிறப்பு செய்தார். சிபிஎம் மாநிலச் செயலாளர் ஆர். இராஜாங்கம் சிபிஐ (எம்.எல்.) மாநிலக்குழு உறுப்பினர் பழனி ஆகியோர் வாழ்த்துரை வழங் கினார்கள்.

மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.அஜீஸ் பாஷா அகில இந்திய பொதுச்செயலாளர் து. ராஜா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். வரவேற்புக்குழு தலைவரும் நிர்வாகக்குழு உறுப்பினருமான கு. சேதுசெல்வம் நன்றி கூறினார். பிரதிநிதிகள் மாநாட்டில் புதுச்சேரி காரைக்கால் மாகே உள்ளிட்ட மூன்று பிராந்தி யங்களிலிருந்து தேர்வுச்செய்யப்பட்ட பிரதி நிதிகள் 153 பேர் பங்கேற்றனர். இவர்களில் பெண்கள் 17 – 50வயதிற்குட்பட்ட இளம் தோழர் கள் 60 ஆகும்.

மாநாட்டின் தலைமைக்குழுவாக அ. இராம மூர்த்தி, கு. சேதுசெல்வம், உ.ஹேமலதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இரங்கல் தீர்மானத்தை மாநில துணை செயலாளர் து.கீதநாதன் வாசித்தார்.

அகில இந்திய மாநாட்டின் வரைவு அரசியல் அறிக்கையினை முன்மொழிந்து அஜீஸ் பாஷா உரையாற்றினார். அகில இந்திய பொதுச்செயலாளர் து. ராஜா அரசியல் அறிக்கையின் முக்கிய அம்சங்களை விளக்கிப்பேசினார்.

அதனைத் தொடர்ந்து புதுச்சேரி மாநில அமைப்பு நிலை அரசியல் மற்றும் நடைபெற்ற வேலை அறிக்கையினை மாநில செயலாளர் அ. மு. சலீம் முன் மொழிந்து பேசினார். இந்த அறிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று 20 தோழர்கள் பேசினார்கள். மாநில செயலாளரின் தொகுப்புரைக்கு பின்னர் இந்த அறிக்கைகள் ஏற்கப்பட்டன.

18 ந்தேதி இரண்டாம் நாள் காலை மாநில கட்டுப்பாட்டுக்குழு அறிக்கையை தலைவர் நவீன். தனராமனும் தணிக்கைக் குழு அறிக்கையை கே. சேகரும் முன் வைத்தனர். இந்த அறிக்கைகள் ஏகமனதாக ஏற்கப்பட்டது. மாநாடு பிரதிநிதிகள் தகுதி ஆய்வு அறிக்கையினை அன்துவான் வாசித்தார்.

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இடம்பெறும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைக்க பாடுபடுவது என்ற தீர்மானத்தை ஆர். விசுவநாதனும் மாநில உரிமைகளை பறித்து மக்களை வஞ்சிக்கும் பாஜக கூட்டணியில் இருந்து என். ஆர். காங்கிரஸ் வெளியேற வேண்டும் என்ற தீர்மானத்தை அ. மு. சலீமும் புதுச்சேரியை தொடர்ந்து வஞ் சிக்கும் மத்திய பிஜேபி அரசை கண்டித்து போராட்டம் நடத்துவது என்ற தீர்மானத்தை நாரா. கலைநாதனும் முன்மொழிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**புதிய மாநிலக்குழு :** 35 பேர் கொண்ட மாநிலக் குழுவும் 10 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் அகில இந்திய கட்சியின் வழிக்காட்டுதல்கள் அடிப்படையில் ஒருமனதாக தேர்வு செய்யப் பட்டனர். வழக்கறிஞர் ஜி. கோவிந்தசாமி தலை மையில் மூன்று பேர் கொண்ட கட்டுப்பாட்டு குழுவும் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநில செயலாளராக அ. மு. சலீம், துணை செயலாளராக கு. சேதுசெல்வம், பொருளாளராக வ. சுப்பையா ஆகியோரும் நிர்வாகக்குழு உறுப் பினர்களாக நாரா. கலைநாதன் , இ.தினேஷ் பொன்னையா, சிவா இரா.அந்தோணி, டி. பி. ரவி, ம.அமுதா, காரைக்கால் மதியழகன் வழக்க றிஞர் ஜி. கோவிந்தசாமி ஆகியோர் தேர்வுச் செய்யப்பட்டனர்.

செம்படை அணிவகுப்பு என்று பெயர் சூட்டப்பட்டது. பேரணி தயாரிப்பு பணிகள் குறித்து தொகுதி செயலாளர்கள் வெகுஜன அரங்க பொறுப்பாளர்களாக கூட்டம் நடத்தி திட்டமிடப்பட்டது. இந்த திட்டமிட்ட செயல் பாடுகளும் தோழர்களின் அயராத உழைப்பின் காரணமாகவும் செம்படை அணிவகுப்பில் ஆயிரக்கணக்கான இளம் தோழர்கள் சிவப்பு பனியன் அணிந்தும் பெண்கள் சிவப்பு புடவை அணிந்தும் கலந்து கொண்டனர்.

பேரணியின் முகப்பில் சீருடை அணிந்த பேண்டு வாத்திய கலைஞர்கள் பேண்டு இசைக்க இளம்பெண்கள் தொண்டர்படை சீருடை அணிந்து மிடுக்காக அணி வகுத்து வந்தனர். அவர்களை தொடர்ந்து இளம் தோழர்கள் துடிப்புடன்அணி வகுத்து வந்தனர்.

ஆணுக்கு பெண் இங்கு சளைத்தவரில்லை என்பதை நிருபிக்கின்ற வகையில் சிவப்பு சேலை அணிந்து கைகளில் செங்கொடி ஏந்திய பெண்கள் ஆர்ப்பரித்து அணிவகுத்து வந்தனர்.

தங்கள் தொகுதிக்குழுக்களின் பேனர்கள் ஏந்தி மத்திய பிஜேபி அரசின் மக்கள் விரோத கொள்கை களை எதிர்த்து ஆவேச முழக்கங்களை கர்ஜனைகளை கேட்டு வீதிகளில் நின்று வேடிக்கை பார்த்த பொதுமக்களும் மத்திய பிஜேபி அரசை எதிர்த்து கர்ஜித்தனர்.

இளைஞர் மாணவர் அமைப்பை சார்ந்த தோழர்கள் கைகளில் சிவப்பு பலூன் ஏந்தி முழக்கமிட்டு வந்தனர்.

ஏஐடியுசி சங்கத்தினர் சிவப்பு பனியன் அணிந்தும் விவசாய சங்கத்தினர் கைகளில் கரும்பு ஏந்தியும் வந்தனர். கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் சிறுவர்கள் பாரதி, பாரதி தாசன், ஜீவா, பட்டுக்கோட்டை, தமிழ் ஒளி போன்ற முற்போக்கு கவிஞர்கள் முகமூடி அணிந்து வந்தனர்.

பேரணியின் முகப்பில் அகில இந்திய பொதுச செயலாளர் து. ராஜா தமிழ் மாநில செயலாளர் இரா. முத்தரசன் மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர் அஜீஸ் பாஷா மாநில செயலாளர் அ. மு. சலீம் முன்னாள் அமைச்சர் ஆர். விசுவநாதன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாரா. கலைநாதன் தேசியக்குழு உறுப்பினர் அ. இராமமூர்த்தி துணை செயலாளர் கு. சேதுசெல்வம் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பேரணியின் முகப் பில் நடந்து சென்றனர்.

காமராஜர் நகர் தொகுதிக்குழு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பறையாட்டம் மாடு மயிலாட்டம் நெருப்பு விளையாட்டு போன்றவை பொதுமக்கள் பெரிதும் ஈர்த்தது.

பேரணியின் முடிவில் ஜீவா காலனியில் பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு மாநில செயலாளர் அ. மு. சலீம் தலைமை வகித்தார். திருச்சி பாரதி கலைக்குழுவினரின் அரசியல் நையாண்டி நிகழ்ச்சி சிறப்பாக அனைவரையும் கவர்ந்தது. கலை ஆலயம் பைன்ஆர்ட்ஸ் அகடாமியின் நடன மாணவிகளின் கொடி நடனமும் இசையும் கவிஞர் நவகவி மற்றும் கவிஞர் பரிணாமன் பாடல்களும்அனைவரையும் பரவசப்படுத்தியது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் து.ராஜா தமிழ் மாநில செயலாளர் ஆர். முத்தரசன் மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர் அஜீஸ் பாஷா விடுதலை சிறுத்தைகள் கட்சி பொதுச்செயலாளர் துரை. ரவிக்குமார் ஆகியோர் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார்கள். தமிழ்க்கடல் நெல்லை கண்ணன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் மாநில துணை செயலாளர் சேதுசெல்வம் நன்றி கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநில 23 வது மாநாடு நிகழ்வுகள் பேரணி பொதுக் கூட்டம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் மிகுந்த நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் கட்சி அணிகளுக்கு அளித்து உள்ளது.

## இந்த வார தம்பிக்குறள்

### 84. ஆற்றலில் ஆழியுமாசு

**ஆற்றலில் என்றும் அழியுமாசு அஃதல்ல**
**மற்றதில் மாளா அது.**

அறியாமை என்ற குற்றம் ஊக்கம் கலந்த உழைப்பினால் தான் விலகும். வேறு எந்த முயற்சியாலும் அறியாமையை அகற்ற இயலாது.

**ஆற்றிய ஆற்றின் அகலுமாசு மாற்றாங்கே**
**போற்றிய போற்றின் புலம்.**

உழைக்கும் உழைப்பு எந்த அளவோ, அந்த அளவு பணி செம்மைப்படும். அதுபோல உழைப்பின் அளவே அறிவு பெருகி, ஐம்புலன்கள் செம்மைப்படும்.

தோழர் கே.கிருஷ்ணன் இல்ல
திருமண வரவேற்பு நிகழ்ச்சி

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க
திருவள்ளூர் மாவட்டச் செயலாளர்
தோழர் **கே.கிருஷ்ணன்** அவர்களின்
மகள் **கே.திவ்யபாரதி – ஆர்.கார்த்திக்**

திருமண வரவேற்பு நிகழ்ச்சி 1.09.2022 அன்று மாலை
6.00 மணியளவில் பொன்னேரி, ரெட்ஹில்ஸ் ரோடு, பஸ்டெப்போ
எதிரிலுள்ள ஆதித்தனார் அரங்கத்தில் நடைபெறுகிறது.

சிறப்புரை வழங்குவோர்:
தோழர் **இரா.நல்லகண்ணு**
சுதந்திரப் போராட்ட வீரர், மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

தோழர் **சி.மகேந்திரன்**, சிபிஐ தேசிய நிர்வாகக்குழு

தோழர் **ஏ.எஸ்.கண்ணன்** எக்ஸ்.எம்.எல்.ஏ.,
ஏஐடியூசி மாநில துணைத் தலைவர்

தோழர் **கீ.சு.குமார்** எம்.ஏ.,பி.எல்., மாநிலச் செயலாளர்,
தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

தோழர் **எஸ்.கே.சிவா,** மாநில செயலாளர்,
தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

தோழர் **கே.கஜேந்திரன்,** சிபிஐ மாவட்டச் செயலாளர்

தோழர் **பி.வி.செந்தில்,** இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர்



தங்கள் சுற்றமும், நட்பும் சூழ
வருகை தந்து மணமக்களை
வாழ்த்தியருளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்!

அவ்வண்ணமே கோரும்
**கே.கிருஷ்ணன்**
**கே.கலா**
செல்: 99415 38135

## கந்துவட்டி மிரட்டல் - தாய், மகள் தெப்பகுளத்தில் குதித்து தற்கொலை

### கம்யூனிஸ்ட் கட்சி பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆறுதல்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் கம்மாபட்டியை சேர்ந்தவர் முனீஸ்வரன் . சவரத்தொழிலாளி ஆவார் . இவரது மனைவி மகாலட்சுமி (36) , மகள் அங்காளீஸ்வரி(12), மகன் சந்தனபாண்டி (10) . மகாலட்சுமி தனது மருத்துவ செலவுக்காக ரூ4 லட்சம் வரை கடன் வாங்கியதாக சொல்லப்படுகிறது. கடனை கட்டமுடியாத நிலையில் கடன் கொடுத்தவர்கள் நெருக்கடி கொடுத்துள்ளனர். இதனால் மன உளைச்சல் ஏற்பட்டு மகாலட்சுமி தனது மகள் அங்காளீஸ்வரியுடன் சென்று ஸ்ரீவில்லிபுத்தூர் திருமுக்குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்கள். போலீசார் உடல்களை மீட்டு வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தலைவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி இரவி ஆகியோர் மஹாலட்சுமியின் கணவர் முனீஸ்வரனை சந்தித்து ஆறுதல் கூறி விபரங்களை கேட்டறிந்தனர். கந்துவட்டிகாரர்கள் நெருக்கடி காரணமாக தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. கந்து வட்டிகாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், குடும்பத்தினருக்கு பாதுகாப்பும், அரசு நிவாரண நிதி யும் வழங்க வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசுக்கு கோரிக்கை அனுப்பி உள்ளனர்.

## தோழர் கே.சுப்பராயன் எம்.பி. நிதியின் மூலம் ஊனமுற்றோருக்கு நான்கு சக்கர வாகனம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் பொது நிதியிலிருந்து, பவானி கிழக்கு கண்ணார வீதியில் வசிக்கும் ஏழைத் தொழிலாளி முருகானந்தம் அவர்களுக்கு மின் மோட்டார் பொருந்திய நான்கு சக்கர வாகனத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட அலுவலகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் டி.ஏ. மாதேஸ்வரன், முருகானந்தத்திடம் வாகன சாவியை வழங்கினார். மேற்கண்ட நிகழ்ச்சியின் போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ். கந்தசாமி, கே.கே.சந்திரசேகர் மற்றும் பவானி நகராட்சி முன்னாள் மேலாளர் எம்.தங்கராஜ், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் சுரேஷ்குமார், தமிழ்நாடு கட்டிட கட்டுமான சங்கத்தின் மாவட்ட தலைவர் கே.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் ரவி, கட்டிட கட்டுமான சங்கத்தின் கோபி தாலுகா தலைவர் ராஜேந்திரன், சிவலிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பவானி ஒன்றிய பொருளாளர் அபிபுல் ரகுமான், மூத்த தோழர் செல்லமுத்து, மற்றும் ஏ.ஐ.பி.இ.ஏ. நாமக்கல் மாவட்ட தலைவர் பிரபாகரன், முருகானந்தம் மற்றும் அவரது குடும்பத்தினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## தோழர் ஆறுமுகம் மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் 37வது வட்ட கிளைச் செயலாளர் வேதாச்சலம் அவர்களின் சகோதரர் தோழர் ஆறுமுகம் இயற்கை எய்தினார். அவருடைய உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டக் குழு சார்பில் மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநில செயலாளர் கீ.சு.குமார், மாவட்டச் செயலாளர் ஜி.சுப்பிரமணி, பெரம்பூர் பகுதி செயலாளர் சுரேஷ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் கருணாகரன், நாகராஜ் மற்றும் ஜெகதீசன், தில்குமார் உள்ளிட்டோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## அருந்ததி இன மக்கள் வீட்டுமனை பட்டா கேட்டு ஆட்சியரிடம் மனு

தருமபுரி மாவட்டம், நார்த்தம்பட்டி அருந்ததியர் இன மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனை சாலை விரிவாக்கத்தின் போது அரசு எடுத்து கொண்டதால் வீட்டுமனை இழந்த மக்களுக்கு வீட்டுமனை வழங்க கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் சாந்தியிடம் மனு அளித்தனர். இந்த மனு அளிக்கும் நிகழ்ச்சியின் போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி, எம்.மாதேஸ்வரன், நல்லம்பள்ளி வட்டார செயலாளர் பி.பிரசாத் மற்றும் நிர்வாகிகள் ராஜி, சண்முகம், பாதிக்கப்பட்ட அருந்ததி இன மக்கள் உடன் இருந்தனர்.

# நெல்லைக் கண்ணன் மறைவு

### இந்நியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

தலைசிறந்த பேச்சாளரும், தமிழ் கடல் என்ற புகழுக்குரியவருமான நெல்லை கண்ணன் (77) மறைந்தார் என்ற துயரச் செய்தியை மனது ஏற்க மறுக்கிறது.

1945 ஆம் ஆண்டு திருநெல் வேலியில் பிறந்த நெல்லை கண்ணன், தமிழ் இலக்கிய, பண்பாட்டு ஆராய்ச் சியாளர் நா.வானமாமலை, மற்றும் அவரது மாணக்கர்கள், மூத்த தலை வர் இரா.நல்லகண்ணு, மறைந்த விவசாயிகள் இயக்கத் தலை வர் சோ.அழகர்சாமி, இலக்கிய படைப்பாளர் தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோருடனும், இயக்கத்தோடும் தோழமை உறவு கொண்டிருந்தவர்.

தமிழ் இலக்கியத்தில் அது தொன்மை கால படைப்புகளானாலும், நவீனகாலப் படைப்புகளானாலும் அவைகளை மை உறிஞ்சும் தாள்போல் உள் வாங்கி, தமிழ் சமூகத்துக்கு எடுத்துக் கூறும் பேருரையாளர்.

ஆன்மீக புரட்சியாளர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பட்டிமன்ற மேடைகளில் பேச்சாளர், தனி பட்டிமன்ற மேடைகளில் நடுவர், பொதுத் தளங்களில் ஊக்கமூட்டும், வாழ்வை நெறிப்படுத்தும் சொற் பொழிவாளர், வரலாறு படைத்த தேசவிடுதலை போராட்டத் தலைவர் களையும், வீரர்களையும் காட்சிப் படுத்தி கேட்போரை பரவசப்படுத்தும் ஒலிக்காவியம் படைக்கும் பேச்சுக் கலைஞர், தொன்மைதமிழ்இலக்கியக் கடலில் நங்கூரம் போட்டு நின்று, அரிதினும் அரிதான செய்திகளை தரைவாழ் மக்களுக்கு அள்ளித்தந்த வள்ளல். செம்மொழியாம் தமிழ் முழக்கம் செய்து வந்த நெல்லைக் கண்ணனின் இழப்பை, இலக்கிய உலகம் எளிதில் ஈடுசெய்ய இயலாது.

இலக்கியத் தளத்தில் மட்டுமல்ல அரசியல் களத்தில் கர்மவீரர் காமராஜரின் தலைமை ஏற்று, சுழன்று, சுழன்று பரப்புரை செய்த முன்னணி தலைவர். இவரது "கலாய்ப்பு" விமர்சனத்துக்கு உள்ளாவோரையும் ரசிக்கச் செய்யும் ஒலி அலைக்கற்றில் நெல்லை கண்ணன் என்றென்றும் வாழ்ந்திருப்பார்.

நெல்லை கண்ணன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது மகன்களுக்கும் இலக்கிய உலக நண்பர்களுக்கும், படைப்பாளர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### அரசு போக்குவரத்து கழக தருமபுரி மாவட்ட

# ஏஐடியூசி தொழிற்சங்க மண்டல மாநாடு

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தருமபுரி மாவட்ட ஏஐடியூசி தொழிற்சங்க 31வது மண்டல ஆண்டு பேரவை மாநாடு தருமபுரியில் நடை பெற்றது. மாநாட்டில் நிர்வாகக்குழு உறுப்பினர் வரதராஜ் தேசிய கொடி ஏற்றினார்.நிர்வாகி கணேசன் சங்க கொடி ஏற்றினார்.மாநாட்டிற்கு மண்டல தலைவர் இரவி தலைமை வகித்தார்.மண்டல துணை தலைவர் கே.துரைசாமி வரவேற்றார்.

சம்மேளன செயலாளர் என். முருகராஜ் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.மண்டல பொது செயலாளர் சி.நாகராசன் வேலை அறிக்கை வைத்து பேசினார்.மண்டல பொருளாளர் நாராயணன் நிதி நிலை அறிக்கை வைத்து பேசினார்.இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிமாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம்,ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ் வரன்,மாவட்ட பொது செயலாளர் கே.மணி,முன்னாள் மண்டல செய லாளர் இராமமூர்த்தி,உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் என்.மனோகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.சம்மேளன பொது செயலாளர் ஆர்.ஆறுமுகம் மாநாட்டை நிறைவு செய்து பேசினார்.

மாநாட்டில் பொதுத்துறை பய ணிகள் போக்குவரத்தை பாது காத்திட மத்திய,மாநில அரசுகள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். வரும் 23ந் தேதி நடை பெறும் ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு காண வேண்டும். 2003க்கு பின்னர் பணியில் சேர்ந்த அனைத்து தொழிலாளர்களையும் ஒய்வூதிய திட்டத்தில் இணைக்க வேண்டும்.மோட்டார் வாகன சட்டப்படி வேலை நேரம்,ஓடும் தூரம் ஒரு பணிக்கு சட்டப்படி நிர் ணயம் செய்ய வேண்டும்.தினசரி வசூல் படி நிர்ணயம் செய்வதை தொழிற்சங்கங்களிடம் கலந்து பேசி நிர்ணயம் செய்ய வேண்டும்.காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். வழித்தட பணி ஒதுக்கீடு பாரபட்சம் இல்லாமல் சீனியாரிட்டி அடிபடையில் சுழல் முறையில் ஒதுக்க வேண்டும்.

என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியில் துணை செயலாளர் சிங்காரவேலன் நன்றி கூறினார்.

மாநாட்டில் புதிய நிர்வாகிகளாக மண்டல தலைவர் எஸ்.இரவி,துணை தலைவர்கள் கே.மணி,நாராயணன், துரைசாமி,பூபேஷ்குப்தா,மண்டல பொது செயலாளர் சி.நாக ராசன்,துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,மருதமலை,சஞ் சீவகாந்தி,பொருளாளராக கணேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### மின்சாரத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து

# தொழிலாளர்கள், விவசாயிகள், குடியிருப்போர் சங்கங்கள் இணைந்து எதிர்ப்பியக்கம்

தமிழ்நாட்டில் இயங்கும் மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டம் ஆக. 18 அன்று சென்னை எழும்பூரில் எச்எம்எஸ் அலு வலகத்தில், தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை யின் பொதுச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் எச்எம்எஸ் அகில இந்திய தலைவர் க.அ.ராஜா ஸ்ரீதர், எம்.சுப்பிரமணிய பிள்ளை, தொமுச பொருளாளர் கி. நடராஜன், ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, எம்.ராதாகிருஷ்ணன், சிஐடியு மாநில பொதுச் செயலாளர் ஜி.சுகுமாரன், ஐஎன்டியுசி மாநில செயலாளர் டிவி. சேவியர், ஏஐயுடியுசி வி.சிவக்குமார், உழைக்கும் மக்கள் மாமன்றம் இரா.சம்பத், ஏஐசிசிடியு திருநாவுக்கரசு, எல்எல்எஃப் பேரறிவாளன், எம்எல்எஃப் அந்திரிதாஸ், எல்டியுசி ஏ.எஸ்.குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

மின்சார திருத்த சட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசு கடுமையாக முயல்கிறது. தற்போது அந்த சட்ட முன் வடிவு நாடாளுமன்ற நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக் கிறது. ஓராண்டு நீடித்த விவசாயிகள் போராட்டத்தின் இறுதியில் மின்சார திருத்த சட்டத்தை மறுபரிசீலனை செய்ய ஒத்துக் கொண்ட ஒன்றிய அரசு வாக்குத் தவறு கிறது. இந்தியாவில் உள்ள மாநில அரசுகள் மக்கள் வரிப்பணத்தில் உருவாக்கியுள்ள மின் உற்பத்தி நிலையங்கள், லட்சக்கணக்கான மின் கோபுரங்கள், விநியோக உட்கட்டமைப்புகள் உள்ளிட்டவற்றை காா்ப்ப ரேட்டுகளுக்கு ஒன்றிய அரசு இச்சட்டத்தின் மூலம் தாரை வார்க்கிறது. இதனால் மின் நுகர்வோர் கடும் பாதிப்பு அடைவார்கள். மின் கட்டணம் பல மடங்கு உயரும். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், விசைத்தறி, கைத் தறி உள்ளிட்டவற்றுக்கு கிடைத்த கட்டண சலுகை, வீடு களுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் அனைத்தும் பறிக்கப்படும்.

இந்த மின்சார திருத்தச் சட்டத்தை உடனடியாக நிபந்தனை இன்றி திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசை அனைத்துத் தொழிற்சங்கக் கூட்டம் வலியுறுத்துகிறது. இந்தத் திருத்தச் சட்டத்தினால் மக்கள் சமூகப் பிரிவுகள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. இதனால் ஏற்பட இருக்கும் விளைவுகள் குறித்து அவர்களுக்கு எடுத்துச் சொல்ல, விரிந்த பரப்புரை மேற்கொள்வதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

### அனைத்து தொழிற்சங்க கூட்டம் முடிவு

விவசாய சங்கங்கள், குடியிருப்போர் சங்கங்கள், வணிகர்கள், நெசவாளர்கள், சிறு குறு தொழில் முனைவோர் உள்ளிட்ட அமைப்புகளை ஒன்று சேர்த்து தமிழ்நாடு முழுமையிலும் விரிவான எதிர்ப்பியக்கம் நடத்த முடிவு செய்கிறது. இதற்கான நூல் வெளியீடுகளை ஆயத்தப்படுத்தி, இயக்கத்திட்டத்தை இறுதிப் படுத்த, மீண்டும் 8.9.2022 அன்று கூடுவது என முடிவு செய்யப்படுகிறது. இவ்வாறு கூட்டறிக்கையில் கூறியுள்ளனர்.

## பூ புனித நண்ணீராட்டு விழாவில் ஜனசக்தி நிதி

கோவை மாநகரம் கணபதியை சேர்ந்த பிரபு, கல்பனா ஆகியோரின் மகள் பி.நேஹா விற்கு பூப்புனித நீராட்டு விழா, ஸ்ரீ கிருஷ்ண கவுண்டர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் எம்.ஆறு முகம், கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவ சாமி, ஜே.ஜேம்ஸ், மு.வ.கல்யாணசுந்தரம், சி.ஏ.வேலு சாமி, மூர்த்தி, ஆறுமுகம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள். இதில் ஜனசக்தி நிதியாக ரூ.2000 வழங்கப்பட்டது.



# தோழர் அப்பாத்துரை துணைவியார் சந்திரமதி உடலுக்கு தோழர்கள் அஞ்சலி

முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை துணைவியார் சந்திரமதி அவர்களின் உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில கட்டுப்பாட்டு குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன், தேசியக் குழு உறுப்பினர் மு.வீரபாண்டியன், ஏ.ஐ.பி.இ.ஏ. அகில இந்திய பொதுச்செயலாளர் சி.எச்.வெங்கடாசலம், வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி,

மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, தென் சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா மற்றும் திரளாக தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

# நில அளவை துறை ஆவண குளறுபடிகளை சரி செய்திடுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விரி வுபட்ட மாவட்டக்குழுக் கூட்டம் ஆக. 20 அன்று கோவை ஜீவா இல்லத்தில் வழக்கறிஞர் கே. சுப்பரமணியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம் மாநில மாநாட்டு முடிவுகள் குறித்து விளக்கி பேசினார். மாவட்ட செயலாளர் சி.சிவசாமி இயக்க வேலைகள் குறித்து பேசினார். இதில் பின் வரும் முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

கோவை மாவட்டத்தில் நில அளவைதுறை ஆவணங்களில் பல்வேறு குளறு படிகள் உள்ளது. பொதுமக்கள் தங்களது நில ஆவனமான, பதிவுத்துறை வழங்கும் பத்திரத்திற்கும் நில அளவைத் துறையில் உள்ள பட்டா சிட்டா வரைபட ஆவணங்களுக்கும் இடையில் உள்ள குறை பாடுகளை சரி செய்வதற்கு பொது மக்களுக்கு நில அளவைத் துறையின் மூலம் நோட்டீஸ் வழங்கப் பட்டு வருகிறது. பத்திரத்தில் உள்ள பெயர் ஒன்றாகவும், மாவட்ட நில அளவைத் துறையில் உள்ள ஆவணங்களில் வேறு ஒரு பெயராகவும் இருக்கிறது.

உள்ளூர் திட்டக் குழுமத்தின் மூலம் நகர ஊரமைப்பு வரைபட அனுமதிக்கு மனு செய்கிறபோது தடையின்மை சான்று பல்வேறு நிலைகளில் வழங்கப் படுகிறது. அவ்வாறு அரசின் அனுமதியை பெற்று அங்கீகரிக்கப்பட்ட லேஅவுட்டுகளில் பத்திரத்திலும் வரை படத்திலும் ஒரு அளவும், நில அளவைத் துறையில் வேறு ஒரு அளவாகவும் உள்ளது.

பத்திரத்தில் உள்ள அளவு, நேரடியாக நிலத்தை அளக்கிற போது உள்ள அளவும் ஒன்றாக உள்ளது. ஆனால், நில அளவைத் துறை ஆவணங்களில் அளவு வேறாகவும் உள்ளது. மூலப் பத்திரம், பத்திரம், வில்லங்க சான்று எல்லாம் சரியாக இருந்தாலும் நில அளவைத்துறை ஆவன்களில் சரி செய்ய இயலாத நிலையில் பத்திரப் பதிவு குறைந்து வருகிறது.

மேற்கணும் குறைபாடுகளை சரி செய்தும் முரண்பாடுகள் இல்லாத வகையிலும், சம்மந்தப் பட்ட அதிகாரிகளிடம் மனு செய்தும் மக்கள் அலைக்களிக்கப்படும் நிலைதான் இருந்து வருகிறது. இதனால் சம்மந்தப் பட்டவர்களுக்கு வேலை இழப்பு, பண இழப்பு, கால நேர நீட்டிப்பு போன்றவைகளினால் மன உளைச்சல் ஆகியவைகளுக்கு ஆளாகிறார்கள்.

ஆகவே, மேற்கண்ட குறைபாடுகளையும், முரண்பாடுகளையும் குறிப்பிட்ட கால அளவிற்குள் சரி செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தோழர் பி.சீனிவாசராவ் மணிமண்டபத்தை சீரமைத்திடுக!

## விவசாயத் தொழிலாளர் சங்கம் வலியுறுத்தல்

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க திருவாரூர் மாவட்ட குழு கூட்டம் ஆக. 20 அன்று திருவாரூரில் ம.சிங்காரவேலர் நினைவரங்கில் என். மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ், இரெ.ஞானமோகன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் அ.பாஸ்கர் ஆண்டு உறுப்பினர் சந்தா பதிவு குறித்தும், எதிர்கால இயக்கங்கள் நடத்துவது குறித்தும் விளக்கினார்.

கூட்டத்தில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சந்திரசேகர் ஆசாத், விதொச மாவட்டத் துணைச் செயலாளர் கே.ராஜா, எம்.நாகராஜன், யூ.பன்னீர்செல்வம், ஜெ.ஜெயராமன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: நீர்நிலை, கோயில் மனைகளில் குடியிருப்பவரை நீதிமன்றத்தின் உத்தரவுபடி வெளியேற்றுகின்றனர். அவர்களுக்கு உரிய மாற்றிடம் கொடுக்க வேண்டும்; வீடு கட்டி கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து செப்டம்பர் 13ம் தேதி திருவாரூர் மாவட்டம் முழுவதும் நகர, ஒன்றியங்களில் போராட்டம் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது.

முதியோர் உதவித்தொகையை அரசு படிப்படியாக குறைத்து வருகிறது. இதை அரசு கவனத்தில் கொண்டு முதியோர்களுக்கு உதவித்தொகை கூடுதலாக வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டது.

கர்நாடக மாநிலம் படகராவில் பிறந்து கீழ தஞ்சை பகுதியில் பண்ணை முதலாளிகளிடம் அடிமையாய் வாழ்ந்த மக்களை மீட்டெடுக்கவும் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படவும், சமூக நீதியை பாதுகாத்த தோழர் பி.எஸ்.ஆர்(பி (சீனிவாசராவ்) அவர்களின் தியாகத்தை போற்றும் வகையில் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்களால் பி.எஸ்.ஆருக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டு அன்றைய தமிழ்நாடு துணை முதல்வரும் இன்றைய முதலமைச்சருமான மு. க.ஸ்டாலின் அவர்களால் திறக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு வீசிய கஜா புயலால் மணிமண்டபம் சேதமடைந்தும் அதனை சுற்றியும் கழிவு நீர் தேங்கி சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. பி.எஸ்.ஆர். மணிமண்டபத்தை போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு புணரமைத்து தர வேண்டும்.

திருத்துறைப்பூண்டி தண்டலைச்சேரியில் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி செயல்பட்டு வருகின்றது. கல்லூரிக்கு பண்ணை அடிமையாய் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக போராடி எந்தப் பகுதி மக்களின் உரிமைக்காக போராடினாரோ அதே பகுதியில் என் உடலை புதைக்க வேண்டும் என விரும்பி அதே மண்ணில் புதைக்கப்பட்ட தோழர் (பி.எஸ்.ஆர்.) பி.சீனிவாசராவ் கலைக் கல்லூரி என அறிவித்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சீமை கருவேலமரங்களை அகற்றுக: தருமபுரி மாவட்ட வி.தொ.ச. கோரிக்கை

தருமபுரி மாவட்டத்தில் இருக்கும் நீர்த்தேக்கங்கள், பொதுப்பணித்துறை ஏரிகள், உள்ளாட்சி துறையின் கீழ் இருக்கும் ஏரி,குளம்,குட்டைகள், ஊரணிகள் இதற்கு வரும் மழை நீர் கால்வாய்கள், விவசாயிகளின் தரிசு நிலங்கள்,பட்டா நிலங்கள்,அரசு கால்நடைத்துறையின் கீழ் இருக்கும் மேய்ச்சல் நிலங்கள்,அரசு புறம்போக்கு நிலங்கள், வனத்துறை நிலங்கள் என்று மாவட்டம் முழுவதும் சீமைகருவேலமரங்கள் வளர்ந்து நிலத்தடி நீரை உறிஞ்சி விடுகிறது. அதனால் இதனை அகற்ற வேண்டும் என்று தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் தமிழக அரசை வலியுறுத்துகிறது. இவ்வாறு சங்க மாவட்ட செயலாளர் ஜெ பிரதாபன் தெரிவித்துள்ளார்.

# கவிஞர் பரிணாமன் யூ டியூப் சேனல் தொடக்க விழா

மக்கள் கவிஞர் பரிணாமன் பாடல்கள் யுடியுப் சேனல் தொடக்க விழா தக்கலையில் நடைபெற்றது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தக்கலை கிளை ஒருங்கிணைத்த தொடக்க நிகழ்வுக்கு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் துணைத்தலைவர் எஸ்.கே. கங்கா தலைமை ஏற்றார். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சம்மேளத்தின் அகில இந்தியத் தலைவர் நாவலாசிரியர் பொன்னீலன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் துணைச்செயலாளர் கவிஞர் கண்மணிராசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பரிணாமன் பாடல்களுக்கு இசைக்கோர்ப்பு செய்த அனுபவங்கள் குறித்து இசையாளர் ஆன்றூ எம் அப்பாஜி உரையாற்றினார். எழுத்தாளர் எம்.மீரான்மைதீன் யுடியுப் சேனலை தொடங்கிவைத்து உரை வழங்கினார். தோழர் ஜீவானந்தம் குறித்து பரிணாமன் எழுதி, பாடகர் லோகேஷ் பாடி, இசையமைப்பாளர் தீசன் இசை அமைத்திருக்கும் "தென்கடல் முத்தினம் ஜீவா தேசத்தின் பொக்கிசம்" என்னும் பாடலுக்கு பரிணாமன் அவர்களின் மகனும் ஒளிப்பதிவாளருமான சரத்சந்திரர் காட்சி வடிவம் கொடுத்திருக்கும் பாடல் முதல் பாடலாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

# தோழர் ராஜேந்திரன் 8ஆம் ஆண்டு நினைவு தினம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்வீரராகவும், திருவாரூர் மாவட்டம் கிடாரங்கொண்டான் கட்சித்தலைவராகவும் விளங்கிய ராஜேந்திரன் அவர்களின் 8வது ஆண்டு நினைவு தினம் கிடாரங்கொண்டானில் நடைபெற்றது. ராஜேந்திரனின் நினைவுக் கொடிக்கம்பத்தில் நகரச் செயலாளர் பழக்கடை செல்வம் கட்சிக் கொடியை ஏற்றினார். முன்னாள் நகரச் செயலர் இ.செல்வமணி தலைமை வகித்தார். மாவட்டக்குழு உறுப்பினர் எம்.ஏ.மாரியப்பன் முன்னிலை வகித்தார். துணைச் செயலர் வீ.தர்மதாஸ் தோழரின் வாழ்க்கை குறித்து விளக்கிப் பேசினார். நினைவேந்தல் கூட்டத்தில் நகரக்குழு உறுப்பினர்கள், கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக செயல்படும்**

# டி.பி.ஜெயின் கல்லூரி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுத்திடுக

## மாணவர் பெருமன்றம் கோரிக்கை

தமிழ்நாடு அரசு மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக செயல்படும் சென்னை டி.பி. ஜெயின் கல்லூரி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கவும், மாணவர் சேர்க்கையை உடனே நடத்தவும் சென்னையில் கல்லூரிக் கல்வி மண்டல இணை இயக்குநரிடம் மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் கடந்த 23.08.2022 அன்று மனு அளித்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது,

சென்னை துரைப்பாக்கத்தில் உள்ள அரசு உதவி பெறும் டி பி ஜெயின் கல்லூரியை தனியார் சுயநிதி கல்லூரியாக மாற்றும் முயற்சி கடந்த பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதனால் கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு உதவி பெறும் பாடப் பிரிவுகளுக்கு மாணவர் சேர்க்கையே நடத்தவில்லை. இதனைக் கண்டித்து தமிழக முதலமைச்சர், உயர் கல்வித்துறை அமைச்சர், உயர்கல்வித்துறை அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரிடமும் பல்வேறு புகார் கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இடதுசாரி ஜனநாயக முற்போக்கு மாணவர் அமைப்புகள், அரசியல் கட்சிகள், ஜனநாயக இயக்கங்கள் தொடர்ந்து போராட்டங்களையும் நடத்தி வருகிறோம்.

ஜனநாயகக் குரலுக்கு செவிமடுத்து தமிழக அரசும், உயர் கல்வித் துறையும் டி.பி. ஜெயின் கல்லூரியை நிர்வகிக்க அரசு தரப்பில் சிறப்பு அலுவலரை சமீபத்தில் நியமித்தது. சிறப்பு அலுவலர் பொறுப்பெடுத்த முதல் நாளே மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பாணையை வெளியிட்டார். ஆனால், கல்லூரி நிர்வாகம் அரசின் சிறப்பு அலுவலர் நியமனத்தையும், அரசு உதவி பெறும் பாடப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பாணையையும் எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

உயர்நீதிமன்றம் விசாரித்து வழங்கிய உத்தரவில் மாணவர் சேர்க்கையில் சிறப்பு அலுவலர் தலையிடக்கூடாது என்றும், அதேசமயம் சிறப்பு அலுவலர் வெளியிட்டிருந்த மாணவர் சேர்க்கைக்கான விளம்பரத்தின் அடிப்படையில் மாணவர் சேர்க்கையை நடத்தலாம் என்று உத்தரவிட்டுள்ளது. மாணவர் சேர்க்கைக்கான விளம்பரத்தை பார்த்து பல்வேறு மாணவர்கள் டி.பி. ஜெயின் கல்லூரிக்கு விண்ணப்பத்தை வாங்க சென்றபோது கல்லூரி முதல்வர் விண்ணப்பத்தை வழங்காமல் மாணவர்களின் விவரங்களை கேட்டு அறிந்து கொண்டு அவர்களின் மதிப்பெண் சான்றிதழ்கள், மாற்றுச் சான்றிதழ், ஆதார் உள்ளிட்ட சான்றிதழ்களின் நகல்களை மட்டும் பெற்றுக் கொண்டு இரண்டு நாட்களில் உங்களை தொலைபேசியில் அழைக்கிறோம் என்று அனுப்பிவிட்டார்.

இது நீதிமன்றத்தினுடைய உத்தரவை அவமதிக்கக்கூடிய செயலாகும். தமிழக அரசும், உயர்கல்வித்துறையும் டி.பி. ஜெயின் கல்லூரியை அரசு உதவி பெறும் கல்லூரியாக தொடர வேண்டும் என்கிற நோக்கத்தில் நியமித்த சிறப்பு அலுவலரை எதிர்த்தும், உயர்நீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் செயல்படும் கல்லூரி நிர்வாகத்தை கல்லூரி கல்வி இயக்குனரகம் கண்டிக்க வேண்டும் எனவும், உடனடியாக அரசு உதவி பெறும் பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கையை தொடங்குவதற்கு அதற்கான விண்ணப்பங்களை மாணவர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தங்களை கேட்டுக்கொள்கிறோம். மேலும், நீதிமன்றத்தில் டி.பி.ஜெயின் கல்லூரியினுடைய நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் செயலை கண்டித்து அவமதிப்பு வழக்கை தொடர வேண்டுமென அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.



இளசை கணேசன்

# சிங்கமென சிலிர்த்த செம்படைப் பே(ா)ரணி!



வருகிறது வருகிறது!
சிவப்பு இராணுவம் வருகிறது!

காவிக்குள் ஒளிந்து கொள்ளும்
சங்க பரிவாரக் கும்பலுக்கு எதிராக

தியாகிகள் சிந்திய இரத்தத்தின்
வாரிசுகளாய் இரத்த சாட்சிகளாய்

சோசலிஸ்ட் பரிவாரத்தின்
சீருடை அணிந்த செம்படை போரணி

வருகிறது வருகிறது!
சிவப்பு இராணுவம் வருகிறது!

சீருடை அணிந்த செம்படையின் அணிவகுப்பு வருகிறது

கார்ப்பரேட்டுகளின் மூலதன சுரண்டல் கொடுமையை

கருவறுக்க களம் இறங்கி வருகிறது செம்படை பேரணி, போரணி

வகுப்பு வெறியை வேரடி மண்ணோடு
வெட்டி வீழ்த்தும் வர்க்கப் போராட்ட சிப்பாய்களின்
சீருடை அணிந்த செம்படை பேரணி
மதவெறிக்கு எதிராக
மதச்சார்பற்ற சக்திகளை
ஓரணியில் ஒன்றுதிரட்டும்
சீருடை அணிந்த செம்படை பேரணி

செம்படை பேரணி மட்டுமல்ல,
செம்படை போரணி

**லெப்ட் - லெப்ட்**
**லெப்ட் - லெப்ட்**
**லெப்ட் - ரைட் - லெப்ட்**
**லெப்ட் - ரைட் - லெப்ட்**

இது செம்படைப் பேரணியின் அணிவகுப்பின் ஒலி!
அணிவகுப்புக்கு ஒத்த செம்படையினர் எழுப்பும் குரல் ஒலி!
செம்படையின் காலணிகள் தரையில் எழுப்பும் ஒலி!

ஆகஸ்ட் மாதம் 6,7,8,9 தேதிகளில் கொடி காத்த குமரன் தியாக பூமியாம் திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாடு நடந்து முடிந்துள்ளது.

மாநாட்டின் இறுதி நாளான ஆகஸ்ட் 9ஆம் தேதி செம்படை பேரணியில் அணிவகுத்த சீருடை அணிந்த செம்படையின் அணிவகுப்பு எழுப்பிய ஒலி இன்னும் காதுகளில் ஒலிக்கிறது.
ரீங்காரம் நிற்கவில்லை!
உள்ளத்தை உசுப்பி
தட்டி எழுப்புகிறது!
தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய மாநாடுகளில் இதுவரை இல்லாத அளவுக்கு பிரமாண்டமான பேரணி.
வரலாறு காணாத பேரணி!
வர்க்கப் போராட்ட போரணி!

**லெப்ட் - லெப்ட்**
**லெப்ட் - லெப்ட்**
**லெப்ட் - ரைட் - லெப்ட்**
**லெப்ட் - ரைட் - லெப்ட்**

வருகிறது வருகிறது!
சிவப்பு இராணுவம் வருகிறது!
செம்படைத் தளபதிகள் எம்.இலகுமைய்யா,
சந்திரசேகர ஆசாத் ஆகியோர் தலைமை வகிக்க சீருடை அணிந்த செந்தொண்டர் போர்ப்படை அணிவகுத்து வருகிறது.

காண கண்கொள்ளாத சீருடை அணிந்த சிறார்களின் அணிவகுப்பு!

ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்

என்பதை நிலைநாட்டும் சீருடை அணிந்த இளம் பெண்களின் அணிவகுப்பு!

செகுவேரா பகத்சிங்கின் லட்சிய வாரிசுகளாய்

சீருடை அணிந்த மாணவர், இளைஞர்களின் அணிவகுப்பு!

வர்க்கப்போராட்டத்தின் கூர்முனையாம் சீருடை அணிந்த தொழிலாளர்கள், விவசாயிகளின் அணிவகுப்பு!

சீருடை அணிந்த தொண்டர்களின் அணிவகுப்புக்கான தயாரிப்பு மூன்று மாதங்களுக்கு மேலாக நடைபெற்றது. தயாரிப்பு குழுவின் கன்வீனராக வை.செல்வராஜ் செயல்பட்டார்.

சீருடை அணிந்த ராணுவத் தொண்டர்களின் பயிற்சியாளர்களாக தளபதிகள் எம்.இலகுமைய்யா, சந்திரசேகர ஆசாத் ஆகியோர் செயல்பட்டனர்.

முதல் கட்டமாக மாவட்ட பயிற்சியாளர்களை உருவாக்கும் வகையில் சிவகங்கையில் பயிற்சி முகாம் நடைபெற்றது.

தொடர்ந்து எல்லா மாவட்டங்களுக்கும் இலகுமைய்யா, சந்திரசேகர ஆசாத் ஆகியோர் நேரடியாகச் சென்று மாவட்ட பயிற்சிக்கான தளபதிகளுக்கும் தொண்டர் படைக்கும் பயிற்சி அளித்தனர்,

இத்தகைய முயற்சிகளின் விளைவே திருப்பூரில் சீருடை அணிந்த செம்படையின் மிகப்பிரம்மாண்டமான அணிவகுப்பு!

10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சீருடை அணிந்து அணிவகுத்தனர். இதில் கிருஷ்ணகிரி மாவட்டம் இரண்டாயிரத்துக்கும் மேல்!

அடுத்தபடியாக திருப்பூர், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்கள்!

சீருடை அணிந்த தொண்டர்களின் அணிவகுப்பே 10 ஆயிரத்தை தாண்டியது என்றால் பேரணியில் பங்கேற்றவர்கள் எண்ணிக்கையோ 2 லட்சத்தை தாண்டியது!

சீருடை அணிந்த ராணுவ அணிவகுப்பை தொடர்ந்து...

சிவப்பு சேலை, வெள்ளை ஜாக்கெட், சிவப்பு சுடிதார், வெள்ளை சால்வை அணிந்த பெண்களின் நீளமான அணிவரிசை!

மாவட்ட வாரியாக, கூட்டம் கூட்டமாக சாரை சாரையாக ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் திரண்ட அணிவகுப்பு!

இடையிடையே தாரை தப்பட்டைகள் பண்பாட்டு கலைகள் என்று அமர்க்களப்பட்டது.

பேரணியின் வழிநெடுகிலும் ரோட்டின் இரு பக்கமும் நின்ற திருப்பூரின் மக்கள் இமை மூடாமல் வைத்த கண் வாங்காமல் பேரணியை கண்டுகளித்தனர்.

பேரணியின் முகப்பு பொதுக்கூட்ட திடலை அடைந்த பின்பும் புறப்பட்ட இடத்தில் கூட்டம் கூட்டமாக கிளம்பிக் கொண்டே இருந்தது.

பொதுக்கூட்ட திடலுக்கு பேரணி வருவதற்கு முன்பே திடலின் சரிபாதி கூட்டம் அளவு நிறைந்து விட்டது!!

பேரணியில் திரண்ட கூட்டத்திற்கு பொதுக்கூட்ட மைதானம் தாக்குப் பிடிக்கவில்லை. கூட்டத்தைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கானோர் நிற்க வேண்டிய நிலை இருந்தது!

எதையும் மிகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

பேரணியின் முழுமையான நிகழ்வுகள் பொதுக்கூட்ட உரைகள் ஆகியவை ஜனசக்தி தொலைக்காட்சி மூலம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

உலகம் முழுவதிலும் இருந்து ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் ஜனசக்தி தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பை கண்டு களித்திருக்கின்றனர்! வியந்திருக்கின்றனர்!

ஏற்கனவே நடந்து முடிந்த மாவட்ட மாநாடுகளிலும் எதிர்பார்ப்புக்கும் அதிகமாக மக்கள் திரண்டிருந்தனர்.

இது எதைக் காட்டுகிறது?
கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் பொது மக்களும் நமது கட்சி மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை காட்டுகிறது!

மாநில மாநாடு வகுத்துக் கொடுத்த அரசியல் வழிகாட்டுதலையும் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் நிறைவேற்றுவதில் அணிவகுப்போம்!

**ஜிந்தாபாத் ஜிந்தாபாத்!!**
**இன்குலாப் ஜிந்தாபாத்!!**

**ஓங்குக! ஓங்குக!!**
**புரட்சி ஓங்குக!!!**

தொடர்புக்கு: **82204 68816**



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாடு



















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 27.08.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாடு























Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.